REGD. M. 4642.

# திராவிடநாடு

விலை அணா 2. ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 28—12—47 | இதழ் 36

## சொன்னோம்—நடக்கிறது!

“தேசம் பூராவுக்கும் இன்னும் நெடுநாளைக்கு ஆங்கிலமே பொதுப் பாஷையாக இருக்கக்கூடும்.

இந்துஸ்தானி ராஜாங்கபாஷை அந்தஸ்தை உடனடியாக அடைவது சாத்தியமே அல்ல.

இந்துஸ்தானியே முக்கிய தேசபாஷையாகக் கூடுமாயினும், பல மாகாணங்களின் உணர்ச்சிகளை மதித்துத்தான் மத்தியசர்க்கார் நடந்து கொள்ளவேண்டும்.

தேசபாஷையாகக் கூடிய இந்துஸ்தானி, இலக்கியச் சிறப்பிலும் கருத்து வன்மையிலும் மற்றப் பழைய இந்தியமொழிகளைவிட மட்டமானதாகவே இருந்து வருகிறது.

இன்னும் நெடுநாட்களுக்கு ஆங்கிலமே அகிலஇந்திய ராஜிய, வர்த்தக பாஷையாக இருக்கும் என்பதற்காக மட்டும் இதைநாம் வற்புறுத்துகிறோம் என நினைக்கக்கூடாது. நவீன விஞ்ஞான அறிவு நூல்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. அதுவே உலகில் மிகவும் அதிகமானம்பர் பேசும் பாஷையாகவும், சர்வதேச வர்த்தக, விஞ்ஞானபாஷையாகவும் இருக்கிறது.

குறுகிய மனப்பான்மையுடன் இல்லாமல் விரிவான அடிப்படையில் நாடு வளர்ச்சியுறவும், மக்கள் நிலையான நற்பயனை அடையவும் உதவக்கூடிய முறையில்தான் ஆங்கிலத்தின் உபயோகத்துக்கு வரம்புகட்ட வேண்டும்.”

*   *   *   *

இந்தி, பொதுமொழியாவதற்கு அருகதையற்றது. ஆங்கிலமே நாட்டின் பொதுமொழியாக இருக்கத் தகுதியுடையது. தமிழ்நாட்டில், தமிழ்மக்களின் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயஇந்தியைப் புகுத்தக் கூடாது என்று இந்திஎதிர்ப்புக்காலத்தில் தமிழ்மக்களால் கூறப்பட்ட வாசகங்கள்தானே மேலேஉள்ளவை என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், இந்தி எதிர்ப்பை அன்று ஏளனஞ்செய்த தேசியத் “தினமணி” இன்று 25—12—47-ல் கூறும் வாசகங்கள்தான் இவை.

19-ம் பக்கத் தொடர்ச்சி

எல்லா மக்களுக்கும் வேலை தரலாம் என்றும், இயற்கையில் மறைந்து கிடக்கும் சக்தியை எங்கெந்த வகையில் பயன்படுத்தலாம் என்றும், வாய்ப்பந்தல் போட்டார். இந்தப் பேச்சினால், மனு சமர்ப்பித்தவர்களுக்கு எரிச்சல் ஏற்பட்டிருக்காதாயினும், மனமகிழ்ச்சி பிறந்திருக்காது. அமைச்சரின் போக்கு, அவர் விரும்புகிறபடி, 'அகண்ட இந்தியா' எனும் எண்ணத்தைத் தூண்டுவதற்கு பதில், மாகாணப்பற்றுதலில் அதிக ஆக்கம் பிறப்பதற்கே வழி உண்டாக்கும்.

ஏற்கனவே தொழில்வளம் நிறைந்துள்ளது ஐக்கியமாகாணம். உணவுப் பொருள் உற்பத்தியிலும், அம்மாகாணத் தேவைக்கும் அதிகமாகப் பயிராகிறது. அங்கு இனியும் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க, ஊக்கம் காட்டப்படுகிறது. இந்திய அரசாங்கமும் அதற்குத் துணை செய்கிறது. ஆனால் பற்றாக்குறை மாகாணமாயுள்ள தென்னாட்டிற்கு, உதவி இன்றியமையாததாகவேண்டப்படும் தென்னாட்டிற்கு, தொழில் வளமே இல்லாத தென்னாட்டிற்கு, பத்தாண்டு காத்திருங்கள்—இந்தியா எனும் பரந்த நோக்கம் கொள்ளுங்கள்—எனும் விரும்பத்தகாத பொருத்தமற்ற உபதேசம் செய்யப்படுகிறது.

இங்கு நமது மக்கள் வேலையின்றித் திண்டாடவும், உண்பதற்குப்போதுமான அளவு கிடைக்கப் பெறாமல் வேதனைப்படவும், இயற்கை வளமிருந்தும் அதனைப் பக்குவப்படுத்தும் வகையின்றித் துக்கப்படவும், பரிகாரம் தேட முற்பட்டால் 'மாகாணப்பற்று அதிகம்' எனும் பழிச்சொல்லுக்கு ஆளாகவும் ஆன நிலை இருக்கிறதே—இந்த நிலை மாறவேண்டாமா—இதற்கு நமது முயற்சி இருக்க வேண்டாமா—எனும் எண்ணங்கள், திருமுகம் தந்த தோழர்களின் உள்ளத்தில் ஊசலாடாமலா இருக்கும். இன்று அது வெளிக்கு விளக்கமாகத் தெரியவில்லையென்றி, நாள் செல்லச் செல்ல அந்த எண்ணம் வலுவடையத்தான் போகிறது.

ஏதோ நாம் துவேஷ புத்தி கொண்டு பேசுவதாக நம் மீது பழி கூறித் திரியும் தோழர்கள், ஐக்ய மாகாணத்தில் நடைபெறுவதையும், தென்னாடு புறக்கணிக்கப்படும் தன்மையையும் கருத்தோடு கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## ஆனந்தரங்கம் பிள்ளை திருநாள் கொண்டாடுக.

இளவரசன் நா. நடராஜன் வேண்டுகோள்

கப்பலோட்டிய தமிழர்களிலே முதன்மை வாய்ந்தவரும், உலகமெங்கும் புகழ் பெற்றுப் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்ற "ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு" என்ற பெருநூலின் ஆசிரியரும், புதுச்சேரியில் ஆட்சியாளராக இருந்து ஆட்சி நடத்தியவரும், பிரஞ்சுக் கவர்னரான டூப்ளேயுடன் சரியுரிமை பெற்றிருந்த தமிழ் அமைச்சரும், தமிழ்ப்புலவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளலும், "ஆனந்தப் புரவி" என்ற கப்பலை ஓட்டி அயல் நாடுகளிலே வர்த்தகம் செய்தவருமான புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையின் நினைவு நாள் (186-வது ஆண்டு) 11—1—48ல் வருகிறது. அந்த நாளை ஒவ்வொரு ஊரிலும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழ்ப்பெருமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்திருநாள் கீழச்சிவல்பட்டித் தமிழ் உரிமைக் கழகத்திலும் புதுச்சேரி முதலான பல இடங்களிலும் கொண்டாடப்பெறுகிறது. எனவே ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றிய புத்தகம், படம் முதலான விபரங்கள் வேண்டுவோர், செயலாளர், தமிழ் உரிமைக் கழகம்—கீழச்சிவல்பட்டி, Po. ராமநாதபுரம் ஜில்லா என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ள வேண்டியது.


## முரசொலி

(வார வெளியீடு)

ஆசிரியர்

மு. கருணாநிதி

தனிப்பிரதி ஒரு அணா

ஆண்டுக்கட்டணம் 3 ரூபாய். 14—1—48 பொங்கல் திருநாளன்று வெளிவருகிறது. எங்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

நிர்வாகி

முரசொலி அலுவலகம்.

திருவாரூர்.



14-1-48ல் வெளிவருகிறது

## "வாழ்வு"

(மாத மிரு முறை)

முதல் இதழில்:

முருகு சுப்பிரமணியன்,
சுகி, சி. பி. சின்னராசு,
இளஞ்சேரன்,
இராதாமணாளன்

முதலியோர் எழுதுகின்றனர்.

தனிப் பிரதி 0—2—0

நிர்வாகி "வாழ்வு"

கீழ இராசவீதி, புதுக்கோட்டை


### எஸ். இராமநாதன் புது மணம்

சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக்குழுவினருள் முக்கியமானவரும், முன்னாள் காங்கிரஸ் விளம்பரமந்திரியும், 'வாலிபர் உள்ளம்' எனும் நூலின் ஆசிரியரும், சிறந்த அறவியல் வாதியுமான நமது நண்பர் தோழர் S. இராமநாதன் M.A.B.L., அவர்கள், ஆங்கிலோ இந்திய வகுப்பைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கமாது மிஸ். எல்லின்க்வீன் என்பவரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். தோழர் எச்.டி. ராஜாஅவர்கள் திருமணத்தை நடத்திவைத்தார். புதுமணம்கண்ட தம்பதிகளுக்கு எமது வாழ்த்து.


## சுதந்தரத் தமிழன்

[என்ற அரசியல் தமிழ் வாரப்பத்திரிகை]

(நிர்வாக ஆசிரியர்:- திருச்சி "எதிரொலி" மு. கணபதி)

மதுரையிலிருந்து 28—1—48 அன்று வெளிவருகின்றது.

விற்பனை ஏஜெண்டுகள் எங்கும் தேவை.

# சைவத்திற்கு ஆள் சேர்க்கும் முறை!

[நக்கீரன்]

மண்ணை மறந்தோம்—மகேசுவரன் அருளைப் பெற்றோம். பெண்ணை வெறுத்தோம்—பேரின்பம் கண்டோம்! பொன்னை இகழ்ந்தோம்—புனிதத்தன்மை அடைந்தோம்! அவா என்பது அணுவளவும் எங்கள்பால் கிடையாது! பாசமும் நேசமும் பறந்தோடிவிட்டன! நலந்தீங்கென்பதில் நாட்டமேயில்லை! நகைப்பும் சினமும் நமக்கில்லை! நட்பும் பகையும் நம்மை அணுகா! உடைக்கும் உணவுக்கும் உழைப்பதில்லை! வியர்த்தால் குளிப்போம்! பசித்தால் புசிப்போம்! வானமே கூரை! பூமியே பஞ்சணை! கையே தலையணை! கவலையே இல்லை!

இவை, காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா! துறவிக்கு வேந்தன் துரும்படா! என்று சொல்லித்திரியும் நம் நாட்டு அடியவர் குழாங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடைமொழிச் சொற்களாகும்.

* * *

திருமுனைப்பாடி நாட்டை அரசாண்ட நரசிங்க முனையர் என்பவர் ஒரு சிவ அன்பர். அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவர். திருவாதிரை நாள்தோறும் அடியவர்களுக்கு அன்னமளித்து, ஒவ்வொருவருக்கும் நூறுபொன் விழுக்காடு கொடுப்பது இவர் வழக்கம்.

* * *

ஏது! ஒன்றுக்கொன்று பொருத்தமில்லை என்று யோசிக்கிறீர்களா? மண்ணையும், பெண்ணையும், பொன்னையும் ஒருங்கே வெறுத்து, ஒன்றிலும் பற்றுக்கோடின்றி இருப்பவர்களே அடியவர்கள்—துறவிகள் என்று கூறிவிட்டு, உடனே, திருமுனைப்பாடி நாட்டு மன்னன், அடியவர்களுக்கு, ஆளுக்கு நூறுபொன் கொடுக்க, அதனை அவர்கள் பெற்றுக்கொண்டனர் என்று கூறுவது சரியா—பொருத்தமா என்று கேட்கத்தோன்றும் உங்களுக்கு. பொருத்தமாக இல்லையே என்பதுதான் என்னுடைய கருத்தும். ஓட்டையும் பொன்னையும் ஒப்பநோக்கும் அடியவர்கள், ஒரு மன்னன் பொன் நூறு கொடுக்கின்றான் என்று அறிந்தவுடனே, இடுகாட்டை வட்டமிட்டுத் திரியும் வல்லூறுகள்போல், எங்கெங்கிருந்தோ ஓடிவந்து அம்மன்னன் மனையைச் சுற்றி மொய்த்து விடுகின்றனரே! ஏன்? என்று என்னைக் கேட்டால், நான் என்ன சொல்லமுடியும்? அடியவர் திறம் அறைந்த சேக்கிழார்தான் இவ்விதம் கூறியுள்ளார் என்று நான் சொன்னால், நீங்கள், அவரை எங்குபோய்த் தேடிக்கண்டு, "ஏன் இப்படிச் சொன்னீர்" என்று எப்படிக் கேட்க முடியும்? அவர்தான் இல்லையே இப்போது! ஆனால் அவரால் எழுதப்பட்ட நூல் மட்டும் இருக்கிறது. அந்நூலை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான், சேக்கிழார் ஏன் அவ்வாறு கூறினார் என்பதன் உண்மையை அறியவேண்டும். சேக்கிழாரால் எழுதப்பெற்ற பெரிய புராணத்தை ஆராயும்போது, அது, எதற்காகப் பாடப்பட்டதென்பதன் உண்மை நன்கு புலனாகின்றது. சைவம் அருகிச், சமணம் பெருகி வருதலை அறிந்த சேக்கிழார், சமண நூலான சீவக சிந்தாமணியையே படித்தற்குரிய சிறந்த நூலாகக் கொண்டு படித்துக் கொண்டிருந்த அநபாய சோழன் என்ற மன்னனை அணுகி, அவனுக்குச் சைவத்தின்பால் பற்றுண்டாகக் கூடிய பலகதைகளைக் கூறினார். அவற்றைக் கேட்ட மன்னன், சைவத்தின்பால் பற்றுக்கொண்டவனாகி, அக்கதைகளை எல்லாம் ஒரு புராணமாகப் பாடும்படி சேக்கிழாரைக்கேட்டுக்கொண்டான். சேக்கிழாரும் அக்கதைகளுக்குக் கண் மூக்கு வைத்து, ஒரு புராணமாகத் தொகுத்து, அதற்குப் பெரிய புராணம் என்ற பெயரையும் சூட்டினார்.

கள்ளங்கவடற்ற அக்காலத்து மக்கள், பெரியபுராணத்தில் கூறப்படும் 'புதுமை' நிறைந்த கதைகளைக் கேட்டதும், சமணத்தைப் பார்க்கிலும் சைவமே மேலானதென்று கருதி அதனைப் பின்பற்றலாயினர். அதிலும், இக்காலம் போலன்றி, அக்காலம், அரசன் எவ்வழி-குடிகள் அவ்வழி என்றகொள்கை இருந்தகாலம். இக்காலம் அப்படியன்று. குடிகள் எவ்வழி-மன்னன் அவ்வழி என்ற சீரிய கொள்கை நிலவுங்காலம்.

எனவே, மன்னன், தன் மனம்போன போக்கில் மக்களை ஆட்டிப்படைக்கும் வாய்ப்பைப்பெற்றிருந்த அந்தக் காலத்தில், மன்னன் பின்பற்றிய மதத்தையே மக்களும் பின்பற்றினர் என்பதில் வியப்பொன்றும் இருக்க முடியாதல்லவா. அதிலும், அக்காலத்து மன்னர்கள், தாங்கள் மேற்கொண்ட மதத்தையே தங்கள் ஆளுகைக்கீழ் உள்ள மக்களும் பின்பற்ற வேண்டுமென்பதற்காகக் கையாண்ட முறைகள் பலவற்றுள், நாம் மேலே கூறிய முறையும் ஒன்று. அதாவது, பணம் கொடுத்து மக்களைத் தங்கள் மதத்தில் சேர்ப்பதென்பது. அக்காலத்து மதத்தலைவர்களுக்குத், தங்கள் மதத்தை உருவாக்குவதில் எத்துணை ஆட்பஞ்சம் ஏற்பட்டிருந்ததென்பது இந்நிகழ்ச்சியால் நன்கு தெளிவாகின்றது. பணத்தைக் கொடுத்தும், பாவையரைப் பரமன் ஆலயங்களுக்கு அருகாமையில் இருக்கச் செய்தும், மதத்திற்கு ஆள் சேர்க்கும் அரும்பணி அக்காலத்தில் அருமையாக நடந்திருக்கிறது.

இனி, இந்நிகழ்ச்சியில் கூறப்படும் நரசிங்கமுனையர் என்ற அரசன், ஆதிரை நாளில் அடியவர்களுக்கு அன்னமிட்டு நூறுபொன் வழங்கினான் என்று கூறப்பட்டதன் உட்பொருளும் இதுவேயாகும். மக்களை மதத்தில் சேர்ப்பதற்காக மன்னன் நூறுபொன் விழுக்காடு வந்தவர் அனைவர்க்கும் வழங்கினான் என்று புராணத்தில் பாடப்பட்டிருந்தால், அதனை விழிப்புற்ற மக்கள் எள்ளி நகையாடுவர் என்பதற்காகவே, சாதாரண மக்களுக்கும் அடியவர்கள் என்ற அடைமொழி கூறியும், அவர்களை அனைத்தும் துறந்த அடியவர்களாக்கியும், அப்படிப்பட்ட பற்றுக்கோடற்ற பரமனடியவர்களுக்கு அரசன் அன்பளிப்பாக ஆளுக்கு நூறு பொன் கொடுத்தான் என்றும் கூறப்பட்டது.

மதத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக, இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களைத் துறவிகளாக்கிக் காட்டி, அத்தகையவர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டதென்று கூறினால், அது, ஓட்டையும்பொன்னையும்ஒப்ப

நோக்கும் துறவிலக்கணத்துக்கே மாறுபட்டதாகும் என்பதைக்கூட அக்காலத்து மதக்கங்காணிகளால் எண்ணிப்பார்க்க முடியாது போயிற்று. எப்படியாவது மதத்திற்கு ஆள்சேர்ந்தால் போதும்என்ற ஆட்பஞ்சத்தில் இருந்தவர்களிடம் துறவிலக்கணம் மட்டுமல்ல, வேறு எந்த இலக்கணமுமே கிட்ட நெருங்க முடியாது-எதிர்ப்பார்ப்பதும் ஏமாந்தவர்களின் செயலாகும். எனவே தான், சைவத்திற்கு ஆள் சேர்த்த சேக்கிழாரும், துறவிலக்கணத்தை அறவே மறந்து, அடியவர்களுக்கு அரசன் நூறுபொன்னை அள்ளி வழங்கினான் என்று அயர்ந்து பாடிவிட்டார்.

இனி, ஒவ்வொரு மதத்தினரும்தத் தம்மதங்களுக்குஆள்சேர்ப்பதில்ஏதாவதொரு முறையைக் கையாண்டே தீரவேண்டிய நிலையில்தான், ஒவ்வொரு மதமும் அமைந்துள்ளன. எந்தஒருமதமும், அதன் அமைப்பின் தன்மையால், மக்கள்தாமாகவேஅந்த மதத்தில்பற்றுக்கொண்டுசேரக்கூடிய முறையில்அமையவேஇல்லை. ஒருமதத் தலைவன், தன்மதமல்லாத பிறமதங்களை இழித்தும் பழித்தும்கூறுவதன் வாயிலாகவும், தன் மதத்தை அளவு கடந்து புகழ்வதன் வாயிலாகவுமே இந்த ஆள் சேர்க்கும் காரியத்தைச் செய்கின்றான். இதனாலும், ஆள் சேர்க்கமுடியாதநிலையில்தான், பணம கொடுத்தும், பாவையரைக் காட்டியும், பதவி அளித்தும், வேறுபல செய்தும் தங்கள் மதங்களுக்கு ஆட்களைச் சேர்க்கின்றார்கள். இதில், சைவசமயமே முதற்பரிசு வாங்கக் கூடியதாக இருந்தபோதிலும், வேறு பல மதங்களும் இந்த முறைகளில் சிலவற்றையாவது கையாளாமல் இல்லை.

நம் நாட்டில் கிறித்து மதம் எப்படிப்பரவிற்று என்பதை உற்று நோக்கினால், அது, தன்னை இந்நாட்டவர் ஏற்றுக்கொள்வதற்காக, இங்குள்ள பலருக்கு இலவசக்கல்வியும், இலவசக்குடியிருப்பு வசதியும், அரசியல் மன்றங்களில் பற்பல உயர்ந்த பதவிகளும்கொடுத்ததென்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். கிறித்து மதம், தனக்கு ஆள் சேர்ப்பதற்காகக் கையாண்ட முறை, பெரும்பாலும், இந்நாட்டு இந்துமதக்கொடுமையால் தாழ்த்தப்பட்டும் ஒதுக்கப்பட்டும் உள்ள மக்களுக்கே பெரிதும் பயன்பட்டது. திரிசிரபுரம் முதலான ஊர்களிலுள்ள சிற்சில பார்ப்பனருக்கும் இந்தமுறை தக்க பயனைத் தந்ததென்றபோதிலும், இன்று அவர்களிற் பெரும்பாலோர், தங்கள் எண்ணம் நிறைவேறியதும், மீண்டும் தங்கள் பழையமதமான இந்து மதத்தையே தழுவும் நிலைக்கு வந்துவிட்டனர். இவர்கள்மட்டுமல்ல, யாழ்ப்பாணம், புதுச்சேரி, முதலான ஊர்களிலுள்ள பலரும் இந்த முறையையே கையாண்டுள்ளனர். பதவிக்காகத் தங்கள் மதத்தைவிட்டுபிறமதத்தைத் தழுவி, அதனால் தங்களுக்கு வேண்டிய நலன்கள் யாவையும் அடைந்த பின்னர், மீண்டும் தங்கள் பழைய மதத்தையே தழுவும் நன்றிகெட்ட இயல்பு, உண்மையிலேயே வரவேற்கக்கூடியதன்று. இத்தகையவர்களின் மதமாற்றம், எந்த மதத்திலும் அவர்களுக்குப் பற்றில்லை என்பதையும், தங்கள் இன்ப வாழ்விற்கு பணந்திரட்டிக்கொள்வதே அவர்கள் ஏதாவது ஒரு மதத்தில் சேர்வதின் குறிக்கோள் என்பதையும், இந்நிகழ்ச்சி நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனாற்றான்போலும் மதம் மக்களுக்கு ஓர் அபினிபோன்றதுஎன்றும் சொல்லப்பட்டது.

இனி, இவ்வரலாற்றில் பேசப்படும் நரசிங்கமுனையர் என்பவர், தம்மிடம் வரும் அடியவர்களுக்கெல்லாம், ஆளுக்கு நூறுபொன் விழுக்காடு கொடுத்தார் என்பதும், சைவத்திற்கு ஆள் சேர்க்கும் முறையே என்று கொள்வதை யாரும் தவறென்று கூறமாட்டார்கள். நரசிங்கமுனையர்கையாண்ட இந்தமுறை, சைவத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதல்லவென்று எவரேனும் கருதினால், அது தவறு என்று கூறும் முறையில் சேக்கிழார் கதையின்போக்கை அமைத்துள்ளார். அதாவது,

"நீறணியும் தொண்டர்க்
கெல்லாம் நிகழ்பசும்பொன்,
நூறுகுறையாமல் அளித்து,
................"

என்று கூறியுள்ளார். இதன் பொருள், நெற்றியில் நீறணிந்து வருபவர்களுக்கே அந்த மன்னன் நூறு பொன் கொடுப்பானென்பதும், மற்றையோர்க்கு—அதாவது நீறணியாதவர்களுக்கு எதுவும் கொடுக்கமாட்டான் என்பதும், இதனால் உய்த்துணரக் கிடக்கின்றது. உண்மையாகவே, செல்வம் படைத்த ஒருவன், ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவும் இயல்பினனு இருந்தால், அவன், தன்னிட உதவிபெற வருபவர்கள், நீறணி துள்ளனரா—நாமந் தீட்டியுள்ள னரா—சிலுவை தாங்கியுள்ளனர என்று அறிவதில் தன் கருத்தை செலுத்தவேமாட்டான். "என்ன டம் செல்வம் இருக்கிறது—என்னுடைய தேவைக்குமேல் குவிந்து கிடக்கிறது — என்னை நாடி வருபவ களிடம் இது கிடையாது. எனவே அவர்கள் யாராய் இருந்தாலும்—எந்த மதத்தைச் சார்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களுக்கு உதவ வதே என்னுடைய கடமை" என் முறையில் காரியமாற்றுவதே அவன் எடுத்துக்கொண்ட நோக்கத்துக்கும் அவன் அடைந்துள்ள செல்வத்திற்கும் ஏற்றதும் பொருத்தமுமாகும். அஃ தன்றி, நீறணிந்து வந்தவர்க்கு நூறு பொன் கொடுப்பதும், மற்றையோரை அவதூறாகப்பேசித் துரத்திவிடுவதுமான முறை, தன்னுடைய செல்வம், அது இல்லாதவர்களுக்கு உதவவேண்டுமென்ற பாரபட்சமற்ற நடுநோக்கோடு கூடியதாக உள்ளது என்று எவரும் கொள்ளமாட்டார்கள். இனி, அந்த மன்னன் சைவத்திற்கு ஆள் சேர்ப்பதற்காகவே தன்னுடைய செல்வத்தையெல்லாம் அள்ளி இறைத்தான் என்பதற்கு அவ்வரலாற்றிலேயே இன்னொரு நிகழ்ச்சியும், சேக்கிழாராலேயே கூறப்பட்டுள்ளது. எப்படியென்றால், அந்த மன்னனிடம் உதவிபெற வந்தவர்களில் ஒருவர்,

"மானநிலை அழிதன்மை வரும்
காமக் குறி மலர்ந்த, ஊன
நிகழ் மேனியராய் ஒருவர்
நீறணிந் தணைந்தார்"

அதாவது, மானக் கேட்டினை உண்டாக்கக்கூடிய சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபட்டதன் காரணமாக, உடம்பெல்லாம் அழுகிக் காணப்பட்ட நிலையில் ஒருவர், நீறணிந்த நெற்றியினராய் அங்குவந்து சேர்ந்தார் என்பது இதன் பொருள். இவரைக் கண்ட மற்ற அடியவர்கள், அவன் ஒரு தூர்த்தனென்று அவனை விட்டு விலகி ஒதுங்கி நின்றார்களாய், அதனைக் கண்ட நரசிங்கமுனையர் அத்தூர்த்தரிடம் சென்று,

"சீலம் இலரே எனினும் திரு
நீறு சேர்ந்தாரை ஞா
மிகழ்ந்து அருநரகம் நண்
ணுமல்..........."

(20-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
காஞ்சி] 28—12—47 [ஞாயிறு

# சத்திய சோதனை

✲

அவர் ஆடையைப் பாரீர், அவர் மோகனச் சிரிப்பிலே மக்கள் மயங்குவதைக் காணீர், பின்னரேனும் அவர் ஆத்ம சக்தியை அறிவீர், தெளிந்து அவர்வழியே சிறந்ததெனக் கொள்வீர் — அவர் தூய சிந்தையினர், அவர் காணும் தெய்வம், இயேசுவின் இன்றைய மறுபிறப்பு, அகிம்ஸா தர்மத்தின் இருப்பிடம், சத்திய சோதனையில் தேர்ந்தவர், அவரைக் கண்டு களிமின், ஜன்மம் கடைத்தேறுமின், அவர் காட்டும் பாதையைப் பின் தொடர்ந்து பேறு பலவும் பெறுமின்—

இவ்வாறு எல்லாம் காந்தியாரை அர்ச்சித்து, நம்மையும் அப்பணியை மேற்கொள்ள வேண்டுமெனத் தூண்டும் அநேகர் இந்நாட்டில் உண்டு. இந்நாட்டில் மட்டுமல்ல, வேற்று நாட்டிலும் அத்தகு மாண்பினர் உள்ளனர். இந்த அரும்பணியை உறக்கத்திலும் மறவாது கடைபிடித்து நடப்பதே இன்று முன்னணி வேலையாகக் கொண்டுள்ளனர் சிலர். பெற்ற பதவி,—அடைந்த கீர்த்தி, நசித்துவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்கே, இப்பெரும்பணியை யாற்றி வருகிறார்கள் எனப் பொருள் படப் பேசுவோர் உண்டு. இச்செயலுக்கு, நாம், அவ்வாறு பொருள் கொள்ளமாட்டோம், நமக்குஅத்தகு சிறுமதி இல்லாத காரணத்தால. ஆனால் நாம் ஒன்றுமட்டும் கேட்போம்; அதாவது, மகாத்மா உள்ளவரை நமக்குப்பயமில்லைஜெயமுண்டு-உலகில் அவரைவிட வேறு சமதர்மி கிடையாது — அவரைப் பின் பற்றுவதே நமது கடமை—என இன்று பாராட்டிப் பேசுகிறவர்கள், என்று அவர் சொல்படி நடந்ததுண்டா; வாய் திறந்து தகுந்த ஆதாரம் தாரும் ஐயே என்றே கேட்போம். பதில் கிடைக்காதென்பதை அறிவோம். சிற்சில சமயங்களில், காந்தியார் போக்கில் குற்றம் கண்டதும், அதனைச் சகிக்காது சுயேச்சையாக நடந்து கொண்டதும், நாடறியும்; நாமும் அறிவோம். இத்தகையவர்கள்தான் முன்னாள் நடந்துகொண்ட முறையை மறந்து, மற்றவர்க்கு 'அண்ணலைப் பின்பற்றுக' எனச் சொல்மாரி பொழிகிறார்கள்.

காந்தியார் போக்கு எத்தகு விளைவுகளைக் கொடுக்கின்றன—கொடுக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடுகிறோம். பின்னராவது 'அவரை எப்படிப் பின்பற்றுவது?' எனும் நமது சந்தேகம் நியாயமானதுதான் என முடிவிற்கு வரட்டும்—மக்கள்.

சிலநாளைக்கு முன்பு காந்தியார் பிரார்த்தனைக் கூட்டத்தில், கட்டுப்பாடு நீங்கின உடன் மணங்கு ஒன்றுக்கு ரூ 34 ஆக இருந்த சர்க்கரை ரூ 24 ஆகக் குறைந்துவிட்டதெனக் குறிப்பிட்டார். அதனை மறுத்து பம்பாய் சர்க்கரை வியாபாரிகள் சங்கத் தலைவர், காந்தியாருக்குத் தந்தியொன்று கொடுத்தார். விற்பனைக்கு ஏகபோக உரிமையுடைய இந்திய சர்க்கரை சிண்டிகேட், தம் கைவசமுள்ள மூட்டைகளில் நான்கு லட்சம் மூட்டைகளை ரூ. 35–7, வீதம் விற்பனை செய்துவிட்டதாகவும், பம்பாயிலுள்ள சர்க்கரை ஆலைகள் மூட்டை ஒன்றுக்கு ரூ 40 வீதம் விற்பனை செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தது அத்தந்தியில். இதற்கு நாளதுவரையில் காந்தியார், பிரார்த்தனைக் கூட்டத்தில் பதிலாக எதுவும் பேசவில்லை. வேண்டுமென்றே, இதனை அவர் செய்கிறார் என்று நாம் குற்றம் கூறவில்லை.

இந்தச் சர்க்கரையின் உண்மை வரலாறுதான் என்ன?

சர்க்கரை கட்டுப்பாடு நீக்கப்படும் எனும் செய்தி பத்திரிகையில வெளிவந்த உடனே, கான்பூரில்விலைரூ 42, ஆக்ராவில் ரூ. 60, பம்பாயில ரூ.40 லிருந்து ரூ. 50 வரையில, சென்னையில் ரூ. 37 எனும் நிலையில் உயர்ந்து விட்டது. அதே நேரத்தில் ஐக்ய மாகாண சர்க்கார், ஏற்கெனவே தொழிற்சாலை விலை ரூ. 20-14-0 ஆக இருந்ததை ரூ. 35-7-0 ஆக உயர்த்த உத்தரவிட்டு விட்டது.

சர்க்கரை சிண்டிகேட் செயலாளரும், கைவசம் ஒன்பதுலட்சம் மூட்டைகள் இருப்பதாகவும், ரூ. 34 வீதம் விற்க சம்மதிப்பதாகவும் கூறினார். மத்திய அரசாங்கம் விலையேற்றத்தைத் தடுக்கப்போகிறது எனும் காரணத்தைக் காட்டி, இருக்கும் மூட்டைகளை எல்லாம் எடுத்துக் கொண்டதாக அறிவித்து விட்டது. இவ்வாறு இந்திய சர்க்கார் கூறிகாட்கள் பல ஆயின. மேற்கொண்டு சர்க்கரை பற்றின தகவல் ஒன்றும் அதிகார பூர்வமாக வெளிவரவில்லை. ஆனால் இன்று சர்க்கரை, ஏற்கனவே கள்ளமார்க்கெட்டில் கிடைத்த விலைக்கு தர்ம நியாயமான முறையில் கிடைக்கிறது. இனிமேலும்இது விஷயத்தில் இந்தியஅரசாங்கம் ஏதாவது செய்யுமென்று எதிர் பார்ப்பதற்குமில்லை.

இந்திய சர்க்காரின் நிதி அமைச்சர், தென்னிந்திய வர்த்தக சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் பேசும் பொழுது,

> "ஒரு மணங்கு கரும்பு விலை ரூ. 1-4-0 வீதத்தில் கொண்டு சர்க்கரைவிலையை நாங்கள் நிர்ணயித்தோம். ஆனால்கரும்புவிலையை மணங்குக்கு ரூ. 2 ஆக ஐ. மா; பீகார் சர்க்காகள் உயர்த்தி விட்டன. அதோடு தொழிலாளியின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 25 லிருந்து ரூ. 45க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கரை விலை உயர்ந்திருப்பது கண்ட்ரோல் விலை ஒழிப்பினால் அல்ல."

என ஆணித்திறமாகக் கூறிவிட்டார். சர்க்கரை விலை ஏறினதற்குக் காரணமாகக் காட்டப்படும், கரும்பு விலையேற்றத்தையும் தொழிலாளர் கூலி உயர்வையும் மட்டும்குறிப்பிட்டாரேயன்றி, சர்க்கரைஆலை மன்னர்களின் லாபம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது எனும் புள்ளி விவரத்தையும் கூறி இருந்தால், சர்க்கரை விலை ஏற்றத்திற்கு எது உண்மையான காரணமென்பதைப் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால், அதை அவரால் எப்படிச்செய்யமுடியும்?வர்க்கபாசம் தொண்டையை அடைத்துவிடாதா?

நிலத்திலேஇருக்கும்கரும்புக்கும், அதனை இனிமேல சர்க்கரையாக மாற்ற இருக்கும் தொழிலாளருக்கும், இனிச்செய்யப்போகும்செலவுத் தொகையை, புதிதாகததயாராகும் சர்க்கரை மீதலலவா ஏற்ற வேண்டும்! மணங்கு ஒன்றுக்கு ரூ. 1-4-0 கொடுத்துக்கரும்பைவாங்கயும், ரூ. 25 வீதம் தொழிலாள

ருக்குக் கூலி கொடுத்தும் தயார் செய்து முடிந்து போன கைவசமுள்ள ஒன்பது லட்சம் மூட்டைகளின் விலையை ஏனையா கூட்டினீர்கள் என எவரும் கேட்கவில்லை. கேட்டிருந்தால், அப்போது தெரிந்திருக்கும், நிதி அமைச்சரின் புள்ளி விவரம் கூறும் ஜாலவித்தை!

கையிருப்புச் சர்க்கரை மூட்டைகளை விலை கூட்டி விற்பதால் ரூபாய் மூன்றுகோடி பத்தொன்பது லட்சம் அல்லவா, நிதி அமைச்சரின் நண்பர்களுக்குப் போகிறது! இதனை எப்படி வெளிப்படையாக சண்முகம் கூறுவார்?

நிதி அமைச்சரே கூறுகிறார் கண்ட்ரோல் விலையைக் காட்டிலும் கூடுதலாக இன்று சர்க்கரை விலை இருக்கிறது என்று. காந்தியாரின் பரிபூர்ண ஆசிர்வாதத்தைப் பெற்ற, அவர் ஆணைப்படி கண்ட்ரோலை நீக்கிய, பண்டிதநேரு தலைமையிலும் பட்டேல் ஆதிக்கத்திலும நடக்கும் இந்திய யூனியன் அரசியலில்தான், நிதி அமைச்சராக ஷண்முகம் இருக்கிறார். அவரே குறிப்பிடுகிறார், கண்ட்ரோல் நீக்கப்பட்ட பின் சர்க்கரை விலை உயர்ந்து விட்டதாக. இவ்வளவிற்குப் பின்னரும், காந்தியாருடைய சத்திய சோதனை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

உண்மை நிகழ்ச்சிகளுக்கும் காந்தியார் போக்கிற்கும் எந்தவிதத் தொடர்பும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கிடக்கிறது. இந்நிலையில், 'அண்ணலைப் பின்பற்றுக' என ஊருக்கு உபதேசம் கிளப்புகிறார்கள். ஒருகாலத்தில் மக்களால் பின்பற்ற முடியாத, தலைவர்களாக இருந்தும் தாங்கமுடியாத ஒன்றை, சுமந்து திரியுங்களென கட்டளை இடுவது அடுக்குமா? ஆகுமா? நடக்குமா?

இவ்வளவையும் கண்டு 'வழிகாட்டி' வாய் மூடியே இருக்கிறார். கட்டளைத் தம்பிரான்களோ கண்ட கண்ட வழியெல்லாம் சென்று, மக்களைக் காடுமேடெல்லாம் சுற்றி அடிக்கின்றனர். இந்நிலையில் காணீர் காந்தியாரை-அவர் பாதையே சமதர்மபுரிக்கு இட்டுச்செல்லும் நேர்வழி — பின்பற்றுக எனக் கட்டளை பிறப்பிக்கிறார்கள் சிலர். காந்தியாரின் சத்திய சோதனை இதிகாசத்தின் ஒரு சருக்கம் போலும் இதுவும்! இது கண்டனமல்ல, விஷய விளக்கம்.

✲

## அடுத்த கட்டம்

நிறம் வேறாக இருக்கும் காரணத்திற்காக வேற்றுமை காட்டி நியாயம் பேசுவது எவ்வளவு அக்கிரமமோ, அதைக்காட்டிலும் ஆயிரம்மடங்கு அநீதியானது பிறப்பினால் பேதம் காட்டி, மக்களை மாக்களாக நடத்துவது. அதிலும் தீண்டத்தகாதவர்களெனச் சிலரைக்கூறி, தெருவில் நடக்கவிடாமல் தடுப்பதும், ஆண்டவன் எழுந்தருளி இருப்பதாகச் சொல்லப்படும் இடங்களில அனுமதிக்க மறுப்பதும், உலகிற்கெல்லாம் ஆத்மஒளியைத் தரவல்லபுண்ய பூமி என்று பேசப்படும் நாட்டிற்கு பொருந்தாது. இன்று எங்ஙனம் கோயில்கள் திறக்கப்படுகின்றன? அதுவும் ஏதோ காரணார்த்தமாகச் செய்யப்படுவதாகத்தான் இருக்கிறது. எப்படி இருந்தாலும் ஒரு பெரிய களங்கம் நீக்கப்படுகிறது எனும் அளவில் நாம் மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும்.

தோழர் சிவஷண்முகம் போன்ற அதிகாரத்திலுள்ளவர்களை 'உள்ளே வாருங்கள்' என அழைக்கும் நிலையில்தான் இன்னும் ஆலயப்பிரவேசம் இருக்கிறதாக அவரே கூறுகிறார். ஆலயப் பிரவேசம் மட்டும் போதாது, வேறு பல நன்மைகளையும் செய்ய வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருவாரூர் 'ஹரிஜன' சேவாசங்க ஆண்டுவிழாவில பேசும் பொழுது, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்தச் சங்கமும் இரண்டு தீர்மானங்களைச் செய்துள்ளது. தீண்டப்படாதோர் எனப்படுபவர்கள் குடியிருக்கும் இடங்களை அவர்களுக்கே சொந்தமாக்குவது ஒன்று; போதியகல்வியளிக்கவேண்டுமென்பது மற்றொன்று. இந்தஇரண்டும் ஜீவாதாரமானது. ஒவ்வொருவரும் தோழர் சிவஷண்முகம் போன்று பொருளாதாரத்துறையில் வசதிபெறும் அளவிற்கு வசதி செய்யப்படுவது தான், ஆலயப்பிரவேசத்தின் அடுத்த கட்டம். இந்தக் காரியத்தில் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் முறையில் தாழ்த்தப்பட்ட தோழர்கள் ஒன்றுதிரண்டு ஏகோபித்த குரலில், உரத்துப் பேசவேண்டும். அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

✲

## நீர் நஞ்சாயிற்று!

பாம்பு தீண்டிற்று இறந்தான்—விஷம் குடித்தான் இறந்தான்—என்றெல்லாம் கேள்விபட்டிருக்கிறோம். இதனால் ஆச்சரியம் கொள்வதில்லை-கொள்ளத் தேவையுமில்லை. ஆனால் தண்ணீர் குடித்து இறந்தான் என்றால் எவர்க்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஏதோ தண்ணீர் அசுத்தமாக இருந்திருக்கும், உயிர் கொல்லும் கிருமிகள் அதில் இருந்திருக்க வேண்டும், அதனால்தான் அந்நீரைக் குடித்தவன் இறந்தான் என்று சிலர் வாதிட முற்படலாம். ஓரளவிற்கு-ஏன்—பெரும்பாலும் அது உண்மையாக இருக்கக்கூடியது தான். ஆனால் நாம் சொல்லும் பேர்வழி நல்ல தண்ணீரை, அனைவரும் குடிப்பதற்காக என ஏற்படுத்தப்பட்டுள்ள குழாய்த் தண்ணீரைத்தான் குடித்தான். ஆசை தீரக் குடித்தான்; வயிறு நிறையக் குடித்தான். முடிவு என்ன? சில நிமிடத்திற்கெல்லாம் உணர்வு இழந்தான். உடல் வியர்த்தது. பரிசோதித்துப் பார்த்ததில் பிணமாய் விட்டான் எனத்தெரிந்தது.

அவன்யார்? தண்ணீர் குடித்து ஏன் பிணமானான்? திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கையத்தார் எனும் கிராமத்தவன் அவன். பலநாள் பட்டினி. மதுரைக்குக் கால்நடையாக வந்த பலரிலே அவன் ஒருவன். மீனாட்சி தரிசனத்திற்காக செல்லவில்லை. வேலையாவது கிடைக்காதா எனும் நோக்கத்தோடு மதுரைக்குச் செல்லத்துணிந்தான். வழியிலேயே, விருதுநகரில் புகைவண்டி நிலையத்தில் தண்ணீரைக் கண்டதும், பசித்தீயைத் தணித்துக்கொள்ள நீரைப் பருகினான், உடல் உயிரைவிட்டுப் பிரிகிறவரையில் பருகினான்.

வேலையில்லை, பணங்கொடுத்தாலும் அரிசிகிடைக்கவில்லை, இந்நிலையில் குறைந்தளவானாலும் ஏதோ கொடுத்துத் தீரவேண்டும் எனும் கடமை உணர்ச்சி கொண்டிருந்த அரசாங்கமும், பற்றாக்குறைப்பகுதிகளுக்கு பங்கீட்டை எடுத்து விடுகிறது. மண்ணுக்கு இரையாகும் கட்டைதானே, தண்ணீரைக் குடித்துத்தான் காலங்கழிக்கட்டுமே எனும் உயர்ந்த நோக்கமே ரேஷன் விலக்குக்குக் காரணம்போலும்!

# ★ சிங்காரச் சிறை ★

—●—

நாலுவருடம் அவன் சிறையிலே இருக்கவேண்டும். கடுங்காவல். உலகின் ஒளி அவன் கண்முன் படாது. வானிலுள்ள விண்மீன், வாஞ்சனையுள்ளோரின் முகம், வாழ்க்கையின் மற்ற இன்பம் அவனுக்கு நாலாண்டுக்குக் கிடையாது. வேலை, சோறு, தூக்கம், காவல் என்பன தவிரப் பிறிதொரு சம்பவமும் அவனது நாலாண்டு வாழ்க்கையிலே இராது. கஞ்சிக்கலயமும், கம்பியிட்ட அறையும் காவலாளியின் சீற்றமும் அவனுக்கு விருந்து!

சட்டம் அவனைச் சிறையில்தள்ளி விட்டது. ஏன்? அவன் குற்றம் செய்தான். ஒரு மாதை மண்டையிலே தாக்கினான், இடது கையைத் துண்டித்தான். எனவே அவன் சிறை சென்றான். அவனது சீற்றத்தினால் ஒரு மாதின் கையும் சிதைந்தது.

சட்டம் கூறுகிறது தவறு செய்தவரைத் தண்டி; தவறுக்கேற்ற தண்டனைகொடு என்று. அம்முறையிலே, ஒரு மாதின் கரத்தைத் துண்டித்தவனின் வாழ்க்கையிலே நாலாண்டைத் துண்டித்தது சட்டம். அதை நாம் குறைகூறவில்லை.

சம்பவத்தையும், அத்தகைய சம்பவங்கள் நிகழ இடமளிக்கும் சமுதாயத்தையுமே குறைகூறுகிறோம். அங்கம்மாள் என்ற மாதுக்குத்தான் அங்கம் சிதைக்கப்பட்டது, அருணாசலம் என்ற குற்றவாளியினால். "தங்கம்போன்ற பெண். கண்டால் களிப்பாய், நல்ல அழகு." என்று அங்கம்மாள், அருணாசலத்துக்கு தான் பார்த்துவந்த பெண்ணைப்பற்றி வருணித்து, அவனை அப்பெண்ணை மணந்துகொள்ளச் சொன்னதால், அருணாசலம் கட்டழகியைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று மனப்பால் குடித்தான். மணம் நடந்தது, ஆனால் அவனை மாலையிட்ட மங்கை, அழகில்லை. அங்கம்மாள் சொன்னது அத்தனையும் மோசமெனக் கருதினான், கோபித்தான், ஆத்திரம் மூண்டது. அடித்தான் மண்டையில், கையைவெட்டினான், சட்டம் அழைத்துச் சிறையில் அவ்வனைத் தள்ளிவிட்டது.

*     *     *

திருமணத்துக்கு வேறொருவரின் 'தரகும்' வர்ணனையும், ஏற்பாடும் நடப்பதே தமிழ்நாட்டிலே வழக்கமாகி விட்டது. மணமக்கள் அதற்கு முன்பு ஒருவரை ஒருவர் சந்தித்து இருக்கமாட்டார்கள். சந்திப்பதே அழகல்ல என்பது சமுதாயத்திலே இன்றுள்ள கருத்து. யார் வீட்டுப் பெண்ணையோ யார் வீட்டுப்பிள்ளைக்கோ யாரோ இடையிலே இருந்து எதை எதையோ கவனித்து, ஏற்பாடு செய்து, எரி ஓம்பி, எவரும் அறியா மந்திரத்தை யாரோ ஒரு பார்ப்பனர் ஓதிக்கொண்டே, இலையிலே என்னென்ன பண்டம் வைக்கப்படுகிறது என்பதிலும், இடுப்பிலே எவ்வளவு தட்சணை ஏறிற்று என்பதிலும் கவனத்தைச் செலுத்த, கொட்டுமுழக்குடன் கூடித் திருமணத்தை முடித்து விடுகிறார்கள். பின்னர் (திரு) அழகும் இருப்பதில்லை, (மணம்) நல்வாடையும் இருப்பதில்லை பெரும்பாலான குடும்பங்களிலே! புகுத்தப்பட்ட இடத்திலே புதைந்துகிடப்பது! அகப்பட்டவனிடத்திலே அடங்கிக் கிடப்பது! என்று முடிகிறதே தவிர, இருவரும் உடலும் உயிருமென, வீணையும் நாதமுமென, விளக்கும் ஒளியுமென வாழ்வதாகக் கூறுவதற்கில்லை. மனப்பொருத்தமோ, உடல்பொருத்தமோ, நிலைமைப் பொருத்தமோ கவனிக்கப் படாமல், நடத்தப்படும், திருமணம் கடைசி வரையில் சிறைதானே! அத்தகையசிறையில் அருணாசலம் இருப்பதைவிட நாலாண்டுச் சிறையே சென்றதிலே அதிக கோரம் இல்லை என்போம்!

எத்தனையோ மாதர்கள் தமது மணவினை தமக்கு மனமகிழ்வை அளிக்காது போயிற்று என்பதை உணர்கிறார்கள். எனினும் மனதிலே மகிழ்ச்சி இல்லாத குறையை, மாடி வீட்டி லிருக்கிறோம், மஞ்சமிருக்கிறது, மலர்கிடைக்கிறது, மரகதநிறச் சேலையும் மாதுளை நிற ஜாக்கட்டும், மின்னல் வளையலும், பின்னல் ஜடையும் லோலக்கும் பிறவும் இருக்கின்றன, என்று எண்ணி, மாற்று மகிழ்ச்சியாகக் கொண்டு வாழுகின்றனர், மலராத அரும்பு போல், வெம்பிய பழம்போல!

திருமணம் என்பது வயது வந்த அறிவு வந்த ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் சம்பந்தப்பட்ட—அவர்களின் சுக துக்கம் இலாப நஷ்டம்—மனோ நிலை—ஆகியவற்றைப் பொறுத்ததே தவிர, பூ வைத்துப் பார்த்தல், குறி கேட்டல், விளக்கு வைத்து வேண்டுதல், கயிறு போட்டுப் பார்ப்பது, செவிட்டுச் சுப்பராவையோ, குருட்டுக் கோவிந்த ஐயரையோ, பொருத்தம் பார்க்கச் சொல்லி முடிப்பது என்பதல்ல.

வாழ்க்கையிலே நிம்மதி சந்தோஷம் ஒப்புமுதலியவைகள் பரிமளிக்க வேண்டுமானால் திருமண முறை, ஆரிய மதப் புரட்டர்கள் புகுத்தி விட்டுப்போன, பொல்லாமையும் கேடும் நிறைந்த கருத்துக்களை அறவே நீக்கி, பகுத்தறிவு முறைப்படி அமைய வேண்டும். தமக்கு எது ஏற்றது என்பதைத் தெரிந்துகொள்ளும் பருவமும் பருவத்துடன் அதற்கேற்ற மனப் பக்குவமும் பெற்ற ஆணோ, பெண்ணோ, தமது "மனதுக்கு இசைந்தவர் இவர்" என்றுணர்ந்து பின்னர் ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணையாகக் கொள்ளலே முறை. கடுகடுத்த முகமுடைய கணவனும், கலங்கிய கண்களையுடைய மனைவியும் கால்கை நார்போல் உள்ள மக்களும், கொண்டகுடும்பங்களும், குமுறல், குத்து, வெட்டு, அண்டை அயலாரின் பஞ்சாயத்து முதலியனவற்றையே அரணாகக்கொண்ட குடித்தனங்களும், திருமணமுறையை நாம் திருத்தியமைத்தால், குறையும்; சின்னாட்களில் கேடுகள் இல்லாமலே போய்விடும்.

ஆனால் இதற்கு நமது சமுதாயம் முதலில் திருமண விஷயமாகவும், பெண்கள் விஷயமாகவும் ஆரிய மதத்தினரால் நமக்குள் திணிக்கப்பட்டிருக்கும் கோரமான கருத்துக்களை வெளியே கக்கிவிட வேண்டும். அந்தக் கருத்துக்கள் உள்ளே இருக்கும் வரை, ஜுரம் இருப்பவனுக்குத் தலைவலியும் வாய்க்குமட்டலும் இருந்தே தீருவது போல, வாழ்க்கையிலே தொல்லையும் கவலையுமே மிகுந்து "மாயப்பிரபஞ்சம்—பிரமனின் எழுத்து—கொடுத்து வைத்தது அவ்வளவுதான்—மாரியாயிக்கு மனமிரங்கவில்லை" என்று கூறிக்கொண்டு இருக்கவேண்டியே நேரிடும்.

தமிழர்களுக்கும் ஆரியத்துக்கும் சம்பந்தம் வேண்டாம் என்று கூறுகிறோம். அந்த சம்பந்தம் வாழ்க்கையையே கெடுத்துவிடுகிறது என்ப

தைத் திருமண முறையையும் அதனால் விளையும் பலன்களையும் கவனிப்போர் உணருவர். எனவே "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை" ஒழிக்கப்பட்டு வாழ்க்கை வண்டியின் ஒரு சக்கரம் போன்றுள்ள பெண்ணினத்துக்குப் பெருமையும் விடுதலையும் கிடைக்கவேண்டுமானால், ஆரியக் கருத்துக்களை அடியோடு நீக்கிவிட வேண்டும்.

விதவைகளின் துயரம்பற்றி விவரிக்கத் தேவையில்லை. ஆரியம் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொன்றுமாக அமைத்திருப்பதால் ஆண்கள் எத்தனைமுறை வேண்டுமாயினும் இளம் பெண்களை மணந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர். பட்டுப்போகும் மரத்தில் பழம்தேடுவதுபோல அத்தகைய கிழவன்—குமரி திருமணத்திலே இன்பத்தைத் தேடினால் கிடைக்குமா? சிறைப்பட்டபறவை சிங்காரமாக வாழமுடியுமா? கிழக்கோலத்துடனுள்ளவரைப் புருடனாகப்பெற்ற இளமாது இன்பமாக வாழ வழியுண்டா! மங்கைக்கு, புராண இதிகாசபோதனை பல இருப்பினும், இளமை, இவைகளை எதிர்த்துப் புரட்சி செய்யுமே. பொங்கிய புரட்சி கண்டு பின்னர், புருவத்தை நெரித்துக் கொள்வதிலே பயன் என்ன?

தளிர் தவிக்க, பழுத்த ஓலைக்குப் பராமரிப்புத் தேடுவதா அறிவுடைமை. இளம் விதவைகள் ஏங்க, கிழவனார்கள் குமரிகளைத் தேடித்திரியும் கோரம் கூடாது என்றும், விதவைகளின் விம்மல் நின்றால்தான், நாடும் வீடும் நலம்பெறும் என்றும் நமது இயக்கத்தவர் பிரசாரம் பலமாகப் புரிந்தனர். தாரமிழந்தவன் தாலியிழந்தவளை மணப்பதுதானே. பருவத்துக்கேற்ற பாவையை அடையட்டுமே என்று பலகாலும் கூறி வந்தோம். மற்றும் கணவனையிழந்த மனைவியர் துன்புறுமாறுபோல மனைவியரை யிழந்த கணவன்மார்கள் துன்புறாமைக்குக்காரணம், தான் வேறு மனைவியை மணந்து கொள்ளலாமென்ற தைரியமேயாகும். மனைவியை இழந்தவர்கள் மறுமணம் செய்து கொள்வதாயிருந்தால் விதவைகளைத்தான் மணம் செய்து கொள்ளவேண்டுமென்ற சட்டத்தால் விதவையர்கள் துயரம் ஓரளவிற்குக் குறைவதோடு, ஆண்களுக்கொருநீதி பெண்களுக்கொரு நீதியென்ற அநீதியும் ஒழிக்கப்படும் என்பது திண்ணம்.

பகுத்தறிவுடன் கூடிய காதல் மணம், கலப்புமணம், விதவைமணம், நடக்கவேண்டும். இத்தகைய "தமிழ் மணம்" நடைபெறும் ஒவ்வொரு சமயமும் நாம் ஒவ்வொரு பொதுத் தேர்தலிலே வெற்றி பெற்றதற்கு ஒப்பாகும் என்று கருதுகிறோம்.

சமுதாயம் திருந்திவிட்டால் பின்னர் ஆட்சியைத் தானாக மக்கள், நமது நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்ற விதத்திலே அமைத்துக்கொள்ள எளிதில் முடியும்.

குடும்ப அமைப்பு விஷயத்திலேயே, கூடாத கோணலான, அன்னிய ஆரிய முறைகளைக் கையாண்டு கொண்டுவிட்டால், சர்க்கார் அமைப்பைச் சரியாகச் செய்ய நமது மக்களால் எங்ஙனம் முடியும்? வீடு எங்ஙனமோ அங்ஙனமேதானே நாடு இருக்கும்! வீடு ஆரியர்க்கு அடிமைப்படாது போனால் நாடும் அடிமைப்படாது. வீடு இன்று சிங்காரச் சிறையாகத்தானே இருக்கிறது.

●

# முதற் குலோத்துங்கன்

பண்டைத் தமிழ்நாட்டு மூவேந்தர்களுள் சோழ மன்னனாகிய முதற் குலோத்துங்கன் காலத்தில் ஊர்கள் தோறும் சபைகள் இருந்தன. இச்சபையினரே அங்கு நடைபெற வேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றி வந்தனர். சுருங்கச் சொல்லுமிடத்து, அந்நாளில் கிராம ஆட்சி முழுமையும் இச்சபையாரால் தான் நடத்தப்பெற்று வந்தது எனலாம். இச்சபையின் உறுப்பினரெல்லோரும் கிராமத்திலுள்ள பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவராவர். அக்காலத்தில் தனி ஊர்களும் பல சிற்றூர்களடங்கிய சதுர்வேதி மங்கலங்களும் பலபகுதியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு என்று வழங்கினர். ஒவ்வொரு குடும்பிற்கும் பிரதிநிதியாக ஒவ்வோர் உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பெற்றனர். செங்கற்பட்டுக் கோட்டத்திலுள்ள உத்தரமேரூர் முப்பது குடும்புகளை யுடையதாகவும், தஞ்சாவூர் கோட்டத்தில் சேந்தலை என்று தற்காலத்து வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிசங்கலம் சற்றேறத்தாழ அறுபது குடும்புகளையுடையதாகவும் இருந்தன. எனவே, உத்தரமேரூரிலிருந்த சபை முப்பது உறுப்பினரை யுடையதாக இருந்ததென்பதும், சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்த சபை அறுபது உறுப்பினர்களை உடையதாகவுமிருந்ததென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியென நன்கு விளங்குகின்றன. ஆகவே சபையின் உறுப்பினரது எண் அவ்வூரின் பெருமை சிறுமைக்கு ஏற்றவாறு குறிக்கப்பெறும் போலும்.

## தேர்ந்தெடுக்கப்படுவோர் தகுதி

இனிச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமையுடையோர், காணிக்கடன் செலுத்துவதற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவராகவும், சிறந்த நூல்களைக்கற்ற பேரறிஞராகவும், காரியங்களை நிறைவேற்றுவதில் வன்மையுடையவராகவும் அறநெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு தூயவாழ்க்கை நடத்துவோராகவும், முப்பத்தைந்துக்கு மேல் எழுபத்தைந்துக்குட்பட்ட வயதினராகவும், மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இருந்திராதவராகவும் இருத்தல் வேண்டும் என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன.

இனி, எந்தச்சபையிலாவது உறுப்பினராக இருந்து கணக்குக்காட்டாதிருந்தவரும், ஐவகைப் பெரும் பாதகங்கள் புரிந்தோரும், கிராம குற்றப்பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், பிறர் பொருளைக் கவர்ந்தோரும் கள்ளக்கையெழுத்திடலாகிய கூடலேகை செய்தோரும், குற்றங்காரணமாகத் தண்டிக்கப் பட்டவரும், எத்தகைய கையூட்டுக் கொண்டோரும், கிராமத்துரோகி என்று கருதப்பட்டோரும், இங்கு குறிக்கப்பெற்றோர்க்கு உறவினரும், தம் வாழ்நாள் முழுமையும் கிராமச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்

(16-ம் பக்கத்தில்)

# கேள்வியும் :: :: பதிலும்

1. 'ரங்கோன் ராதா'வின் கதி என்ன?

நண்பரின் நியாயமான கேள்விக்கு, விடை ஒன்றும் கூறுவதற்கில்லை—ராதாவின் விஷயத்தைத்தொடர்ந்து எழுதுவது தவிர. அந்தத் தொடர்கதை இடையில் வெளிவர முடியாமற் போனதற்காக வருந்துகிறேன். இனித், தொடர்ந்துவெளியிட்டுவர, ஏற்பாடாகி இருக்கிறது. பழைய பகுதி அறியாதவர்களுக்குச் சற்றுச் சிரமமாக இருக்கும். இனித் தொடர்ந்து வெளிவரப் போகும் பகுதியின் அளவு சிறியதுதான். அது முடிந்ததும், புதிய வாசகர்களுக்கும் திருப்திஏற்படும்முறையில், புதிய தொடர்கதைவெளியிட இருக்கிறோம்—உண்மையாகவே அது தொடர்கதையாகஇருக்கும்—இடையிடையே நின்றுவிடாது. இப்போது ஏற்பட்ட சங்கடமான நிலைமைக்காகவருந்துகிறேன்—பொறுத்தருள வேண்டுகிறேன்.

2. 'தளர்பதி' ஆகிவிட்டதாகக் கூறுகிறீரே, வயது ஏறுவதன் காரணமாக உடல் தளர்வது நியாயம். எஃகு உள்ளம் படைத்த திராவிட இனத்தைச் சார்ந்த உமக்கு உள்ளம் தளர்வது எங்ஙனம்?

நண்பரின் உடல் உள்ளம் இரண்டும், என்றும், இன்றுள்ளது போலவே எஃகுநிலைமையில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். வயது ஏறிஉடல்தளருவது போலவே விசாரம் ஏறி உள்ளம் தளருவதும் உண்டு. அது எந்த இனத்துக்கும் இயற்கை. அந்த விசாரத்தைப்போக்கக் கூடிய மருந்து, நமக்கு உள்ளம் தளர்ந்தாலும், கேள்விகேட்ட நண்பர் போன்றோருக்குஉள்ளம் எஃகாக இருக்கிறது. எனவே, பொதுவாகத் திராவிடச் சமுதாயத்துக்கு நஷ்டம் இல்லை என்ற நம்பிக்கைதான் என்று கருதிக்கொள்ளட்டும் நண்பர். கூர் மழுங்கிய வாள் நான்; கேள்விகேட்ட நண்பர் போன்றோரின் ஆர்வமிக்க 'தொண்டு' திராவிடச் சமுதாயத்துக்குஇருக்குமட்டும், தளபதி தளர்பதியானதால், நஷ்டமில்லை.

3. இன்னமும் சிலர் உன்னை அண்ணா—அண்ணா—என்று ஏன் கொண்டாடுகிறார்கள்?

கொஞ்சம் நன்றியறிதல் இயல்பு இருப்பதால் என்று எண்ணுகிறேன். நண்பர் போல, அவர்கள் 'சட்டி சுட்டது கை விட்டது'என்ற 'சீரிய' (?) கொள்கையைக் கொள்ளவில்லை போலும். தஞ்சாவூர் அரண்மனை, செஞ்சிக்கோட்டை, போன்ற நிலையிலாவது என்னைக் கொள்ளவேண்டுமென்று எண்ணுவதும், கேள்வி கேட்கும் நண்பருக்குப்பிடித்தமில்லை போலும்.

4. உங்கள் 'பெரியார்' காங்கிரசிலே ஏதோ குருகுலச் சண்டை போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினதும், ஒரேஅடியாகக் காங்கிரஸ் மீது துவேஷம் கொண்டது சரியா?

நண்பரே! எங்கள் பெரியாரைப் பற்றி உங்கள் தோழர்களில் யாரோ, தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் உமக்கு. குருகுலச்சண்டை என்பது, பெரியார் இட்டுக்கட்டியது அல்ல. பொதுமக்களின் ஆதரவு பெற்றபள்ளிக்கூடத்தில், பார்ப்பன மாணவருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும், சாப்பிடும் இடம், படிப்பு முறை, ஆகியவற்றிலே பேதம் காட்டப்பட்டது. பெரியார் மட்டுமல்ல, டாக்டர் வரதராஜுலு, திரு. வி. க. ஆகியோரும் கொதித்தெழுந்தனர். அதன், பின் விளைவாகவே, பெரியார் தமது பிரசாரத்தைத் துவக்கினார். கேள்வி கேட்ட நண்பருக்குக் கூறப்பட்டது போல, துவக்கத்திலேயேகாங்கிரஸ் ஸ்தாபனத்தையோ, காந்தியாரையோ அவர் எதிர்க்கவில்லை. பார்ப்பனத் தலைவர்களின் போக்கை மட்டுமே கண்டித்தார். 'குடி அரசு' இதழில் துவக்க நிலையிலே, காந்தியைப் போற்றிக் கதரை உடுத்துமின்—என்ற சொற்றொடர் கூட வெளியிட்டார். காங்கிரசுக்குள் பார்ப்பனர்கள் ஆதிக்கம் கூடாது என்பதுதான், பிரசாரத்தின் அடிப்படை. அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியும், பார்ப்பனியகண்டனம், புராண மறுப்பு, சமதர்மம், பார்ப்பனியத்துக்குப் பாதுகாப்பளிக்கும் காங்கிரசுக்குக் கண்டனம், என்பதாகும். இவ்வளவு, படிப்படியாகத்தான் சென்றிருக்கிறதே தவிர, பெரியார், காஞ்சிபுரம் மாநாட்டை விட்டுக் கிளம்பியதும், ஒரேயடியாகக் காங்கிரசைத் தாக்கவுமில்லை துவேஷப் பிரசாரம் செய்யவுமில்லை—இப்போது நடப்பதும் துவேஷப் பிரசாரம் அல்ல. நண்பர் கூறுவது போல, குருகுலக் கிளர்ச்சி, 'ஏதோ' குருகுலக் கிளர்ச்சி அல்ல! தமிழ்நாட்டைக் கலக்கிய—தமிழர்உள்ளங்களைக் குலுக்கிய சம்பவம் அது!

5. நேரு சர்க்கார் பலப்பட வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டு கட்சி பலமாகக் கூடாது என்று நேரு சர்க்கார் கூறுகிறார்களே, அது ஏன்?

இதிலென்ன ஆச்சரியம்! சத்தியவான் உயிரை மீட்கச் சாவித்ரி போராடிய கதைபோல, தொழுநோய் பிடித்த புருஷனைக் கூடையில் வைத்துத் தலை மீது சுமந்து, காமக்கிழத்தி வீட்டுக்கு நளாயினி கொண்டு சென்ற கதைபோல, கம்யூனிஸ்டு நண்பர்கள் 'பதிபக்தி' காட்டுகிறார்கள்!!

6. பிரிட்டிஷ் பாசிஸ்டு மாஸ்லியைப் பற்றிமீண்டும் ஏதாவது சேதி உண்டா?

உண்டு! மீண்டும் மாஸ்லியின் குரல் கிளம்பிற்று. கன்சர்வெடிவ், லிபரல், லேபர், எந்தக் கட்சியும் பயனில்லை, எங்கள் கூட்டுறவின்றி, எதுவும் உருப்படாது, எங்களை நீக்கிவிட்டுப் பணிபுரிய எவராலும் ஆகாது, என்று மாஸ்லி பேசிவிட்டு, பிரிட்டிஷ் சர்க்காருக்கு புதுத்திட்டமும் கொடுத்திருக்கிறார். மக்கள்மட்டுந்தான், மாஸ்லியின் பேச்சுக்கு மதிப்பளிக்கப், பிடிவாதமாகமறுத்து வருகின்றனர்!!

7. 1949ம் வருட சட்டசபைத் தேர்தலில் திராவிடக்கட்சி போட்டியிடுமா? போட்டியிட்டால் எத்தனை ஸ்தானங்களைக் கைப்பற்ற முடியும்?

சின்னாட்களுக்கு முன்பு 'விடுதலை'யில் வெளிவந்த செய்திப்படி பொது ஜனவாக்கெடுப்புக்குப் பிறகு, திராவிடர்கழகம், தேர்தலில் கலந்து கொள்ளும், என்று அறிகிறேன். இந்தப் பிரச்னை சம்பந்தமாக, அதிகார பூர்வமான முடிவும், திட்டமும் ஏற்படவில்லை.

7. முஸ்லீம் லீக்கை, கலைப்பதா இல்லையா? திராவிடக்கட்சியின் கருத்து என்ன?

லீக்இருப்பதா வேண்டாமா, என்பது, முஸ்லீம்கள் முடிவு செய்ய

வேண்டிய பிரச்னை. தனித்தொகுதி முறையும் நீக்கப்பட்டு, பாகிஸ்தானும் தனியாக அமைக்கப்பட்டு விட்டபிறகு, லீக் அரசியல் கட்சியாக இருப்பதற்கு அவசியமில்லை என்று, நான் கருதுகிறேன். கழக நோக்கம் அறியேன். முஸ்லீம்கள், தாங்கள் வாழும் பிரதேசத்தின், அரசியல் நிலைமை, பிரச்னை, தங்கள் குறைபாடுகள், ஆகியவற்றைக் கவனித்து, அதற்கு ஏற்றவகையில், ஏதேனும் அரசியல் கட்சியிலே சேர்ந்து கொள்வது தான் நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன். ஈராக், ஈரான், போல, பாகிஸ்தானும் இனித்தனிநாடு—அந்த அளவிலேயே, இங்குள்ள முஸ்லீம்களின் எண்ணம் இருக்க வேண்டும். இதற்கு ஏற்றமுறையிலே, தங்கள் அரசியல தொடர்பை முஸ்லீம்கள் அமைத்துக்கொள்வதுதான் சிறந்தது.

8. முத்தையா முதலியார், திரு. வி. க. ஆகியோரின் இப்போதைய பேச்சு எப்படி இருக்கிறது?

குளிர்ச்சியாக! நம்பிக்கை யூட்டுவதாக! கேட்டுப்பழகிய தோரணையாக!!

9. எந்தமாதிரியானகேள்விகளுக்குப் பதில் அளிக்கிறீர்?

விஷய விளக்கம்—சந்தேகத் தெளிவு — புதியபிரச்னை பற்றிய கருத்தறிவிப்பு போன்றவைகளுக்கு உதவக்கூடிய கேள்விகளுக்குப் பதிலளிக்கிறேன். பிளவை விரிவாக்குவது, புதிய சிக்கல் ஏற்படுத்துவது, தூபம் போடுவது, கிண்டிவிடுவது, இவைகளுக்கு உபயோகப்படும்கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில்லை.

10. தங்களைக் கண்டித்து எழுதினால் கோபம் வருகிறதா?

வருகிறது, தோழரே! மனிதன் தானே! ஆனால் வருகிற கோபம், உடனே மறைகிறது—நேசம் மறக்கவில்லை, நெஞ்சம்! என்றபாடல் அறிவீரல்லவா? மேலும், இந்தக்கோபம், பாசத்தின் தொடர்ச்சியாக வருவது தானே! அதிலே, 'விஷம்' கிடையாதல்லவா? ஆகவே தாராளமாக மனதிற்பட்டதைக் கூறுங்கள், எழுதுங்கள். நடையைப்பற்றிக்கூடக் கவனிக்க வேண்டாம், நோக்கம் மட்டும் சற்று நல்லதாகஇருக்க முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

11. தமிழர் திருநாள், கொண்டாடச் சென்னையில் என்னசெய்ய வேண்டுமென்று கூறுகிறீர்?

முக்கியமாகவும், முதலாவதாகவும் செய்யவேண்டியது, தமிழ்காக்க உயிர் நீத்த, தாலமுத்து நடராஜன், கல்லறை சென்று, காண்பது—இன்றைய தமிழர் இயக்கத்தவருக்குக் காண்பிப்பது!

13. காஞ்சீபுரத்தில், சின்னாட்களுக்குமுன்பு திராவிட மறுமலர்ச்சிக்கழகம் அமைத்தீர்களே? அது, என்ன, திராவிடர்கழகத்திற்கு (Left Wing) இடதுசாரி அமைப்பா?

கேள்வியில், இருபகுதியும் தவறு. அமைத்தது நானல்ல. "திராவிடன்" ஆசிரியர் தோழர் N. V. நடராசன், காஞ்சி திராவிடர்கழகச் செயலாளர் C. V. M. அண்ணாமலை ஆகியஅன்பர்கள் ஆற்றியபணி அது. நான் ஊரிலே இல்லை. அந்தக் கழகமும் இடதுசாரியல்ல.

13. கட்சியிலே ஒதுங்கி இருக்கிறேன் என்று கூறுவதன் பொருள் என்ன? விளக்கமாகக் கூற வேண்டும்.

இதற்குக் கொஞ்சம், கட்சிகள்—நமது கழகம் மட்டுமல்ல—எந்தக்கட்சியும், அமைக்கப்படும் முறையைக் கவனிக்கவேண்டும். கட்சி என்றால், அதைத்தொடர்ந்து சாதாரணமாக, இருசொற்றொடர்கள் உலவும், எங்கும். கட்சியை நடத்துபவர்கள்—கட்சியில் இருப்பவர்கள்—முன்னவர் பின்னதிலும் உண்டு—பின்னவர் முன்னதில் இருந்தாக வேண்டும் என்று பொருள் இல்லை. போர்நடத்துவோர், போருக்கு உதவுவோர், என்று கொள்ளலாம்,

எந்தக் கட்சியிலும், கொள்கை திட்டம், நடைமுறை வேலை, முதலிய அடிப்படைக் காரியங்களைக் கவனிக்கும் வாய்ப்பும் பொறுப்பும், வசதியும் திறமையும் கொண்ட ஒரு சிறு குழுவும், அமைக்கப்பட்ட கொள்கை திட்டங்களை மக்களிடை சென்று கூறியும், எழுதிப் பரப்பியும் வரும் திறமையும் வாய்ப்பும் கொண்ட மற்றோர் குழுவும், பரப்பப்பட்ட கொள்கை, திட்டங்களை, ஆராய்ந்துகொண்டு, நடவடிக்கைக்கு உபயோகித்துக்கொள்ளவும், அந்தக்

(12-ம் பக்கத்தில்)

## "பறக்கும் குதிரை"

உலகத்திலேயே அதிவேகமாகச் செல்லக்கூடியதும், போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படக்கூடியதுமான ஒரு 'ஹெலி காப்டர்' தற்போது பிரிட்டனில் தயாராகி வருகிறது. அதிக பளுவை ஏற்றிச் செல்வதற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் இந்த 'ஹெலி காப்டர்' டபிள்யூ—11 "பறக்கும் குதிரை"யென அழைக்கப்படுகிறது. இது, வரும் வசந்த காலத்தில் தன் முதற் பிரயாணத்தை ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மணிக்கு 154 மைல்கள் வீதம் செல்லக்கூடிய இந்த 'ஹெலிகாப்டர்' 24 பிரயாணிகளையோ அல்லது மூன்று டன் நிறையுள்ள சாமான்களையோ சுமந்து செல்லமுடியும்.

இதைவிட உருவத்தில் சிறியதும், டபிள்யூ—12 'பறக்கும் குதிரை' யென அழைக்கப்படுவதுமான 'ஹெலி காப்டர்' 12 பிரயாணிகளையோ அல்லது $1\frac{1}{4}$ டன் நிறையுள்ள பளுவையோ ஏற்றி செல்ல முடியும்.

பறக்கும் குதிரையா? — இது என்ன அதிசயம்! நமது பண்டைய ஏடுகளில் இதுபற்றிக் குறிப்புளது, தெரியுமோ? என்று கேட்பர், இங்கு சிலர். ஆனால், ஏட்டிலே இப்படி ஒரு குறிப்பு இருந்தும், இதுபோல் ஓர் கருவியும் செய்யாதது ஏன் என்று கேட்டாலோ விழிப்பர்!!

திராவிடர்களுக்கோர் நற் செய்தி!
ஈடற்ற திராவிடர்தம் உரிமையை நிலைநாட்ட இணையற்ற
புரட்சிக் கருத்துக்களை ஊட்டும் எழுத்தோவியங்களாம்:-
கனவில் கண்ட கவி விலை அணா. 10.
நாம் யார்? ...... " " 8.
ஐக்கிய திராவிடம்... " " 12.
[வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.]
விபரங்களுக்கு:- திராவிட கலா நிலையம்.
55, முக்தாருன்னிஸா பேகம் தெரு, மவுண்ட் ரோடு P.O. சென்னை.

பட்டிமன்றம்

# கல்வித் திட்டம்

[பாரதி சுப்பையா]

சுதந்திரம் பெற்றவுடன் நாட்டின் சீரமைப்பிலே கவனஞ் செலுத்திய அரசாங்கங்கள் அதற்கு அடிப்படையாயுள்ள கல்வியிலிருந்தே தொடங்கின என்பதைச் சரித்திரம் காட்டுகிறது. ஆனால் இந்திய நாடு இந்தியர்க்காகியும் இத்துறையில் இன்னும் தக்க கவனம் செலுத்தப் படவில்லையென்பது வருந்தத்தக்கது. எனினும், மொழிவழியும், இனவழியும், நாடும் அரசியலும் அமைய விரும்பும் நாம் வாளாவிருத்தல் கூடாது.

தற்போதுள்ள ஆங்கிலக் கல்வித் திட்டம் அறவே மாறவேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதமில்லை. ஆனால் புதிய கல்வித் திட்டம் என்ன அடிப்படையில் வகுக்கப்பட வேண்டுமென்பதில் தீவிரக் கருத்து வேற்றுமைகள் தோன்றியுள்ளன. அகில இந்தியாவையும் அகக்கண் முன்கொண்டு சிலர் தேசீயக் கல்வித் திட்டங்கள் தீட்டியுள்ளனர். காந்தியார் வார்தாக் கல்வித் திட்டம் தந்துளார். சார்ஜன்ட் ஒரு கல்வித் திட்டம் அமைத்தார். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அம்சத்தை மட்டும் முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றன, எல்லா அம்சங்களும் நிறைந்த கல்வித் திட்டம் ஒன்று தேவை—அவசரமாகத் தேவை—நமது தமிழ் நாட்டுக்கு மிக மிக இன்றியமையாத் தேவை.

கல்வித் திட்டத்தில், இலட்சியம், நிர்வாகம், பள்ளிக்கூடம், ஆசிரியர் பாட புத்தகம் முதலிய அம்சங்கள் முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டும்.

ஆதிகாலத்தில் தமிழ் நாட்டில் வீரமும் காதலும் இலட்சியமாகக் கொண்டு கல்வித் திட்டம் அமைந்திருந்தது. அரசர்களின் ஆதரவு பெற்ற புலவர்கள், மடத்திலும் திண்ணையிலும் அமர்ந்து தமிழ் கற்பித்தனர். வீரமும் காதலும் நிரம்பிய இலக்கிய இலக்கண ஏடுகள் பாடல்களாகக் கற்பிக்கப்பட்டன. அதன் பலனாகத் தமிழ் அரியாசனத்தே அமர்ந்தது. மதம், சாதி இவற்றால் கறைப்படாத தமிழ்ப் பண்பும் வீரமும் காதலும் தமிழ்ப் புலமையும் தழைத்து ஓங்கின. நவீன விஞ்ஞானம் முன்னாளில் தோன்றவில்லை.

பின்னர் ஆரியர் இந்நாட்டை ஆதிக்கங்கொண்ட இடைக் காலத்தில், வடமொழியையும், மதத்தையும், ஆரிய நாகரிகத்தையும் பரவச் செய்வதையே இலட்சியமாகக் கொண்டு கல்வித் திட்டம் வகுக்கப்பட்டது. மன்னர்கள் மான்யங்கள் வழங்கிப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்தனர். மண்டபங்களும், மடாலயங்களும், மரத்தடியும், பூஞ்சோலையும் குருகுலங்களாயின. ஆரிய மதக் குருக்களாகிய ரிஷிகள் ஆசிரியர்களாய் அமர்ந்தனர். புராணங்களும், இதிகாசங்களும், மந்திரங்களும், வேதங்களும் பாட புத்தகங்களாயின. அதன் பலனாக ஆரியம் தமிழை வீழ்த்திவிட்டு அரியாசனத்து ஏறியது. ஆரியம்புகுந்ததால் தமிழ், அழகு குன்றிச் சிதைந்தது. தமிழ்ப் பண்பும், வீரமும் காதலும் ஏட்டளவில் நின்று, மதம், சாதி, விதி, கடவுள், பாவம், புண்ணியம் என்ற கொள்கைகளடங்கிய ஆரிய நாகரிகம் பரவியது. பகுத்தறிவு குன்றியது. சிந்தனை மாய்ந்தது. இவ்வுலகம் மாயை ஆயிற்று. மறுவுலகம் நித்தியமாயிற்று. அஞ்ஞானம் பெருகியது. விஞ்ஞானம் இந்நாளிலும் தோன்றவில்லை.

அதன்பின் ஆங்கிலேயர் வந்தவுடன் ஆங்கிலமும் ஆரியமும் ஒப்பந்தம் செய்துகொண்டு அரசியலில் ஏகாதிபத்தியத்தையும், பொருளாதாரத்தில் சுரண்டலையும், சமூகத்தில் மத அடிமையையும் இலட்சியமாகக்கொண்டு ஒரு கல்வித்திட்டம் வகுக்கப்பட்டது. பல பாடசாலைகள் ஏற்பட்டன. அவற்றின், நிர்வாகம் சில அரசாங்கத்தினிடமும் பல மடாதிபதி, முதலாளி, ஜமீன்தார் ஆகிய தனிப்பட்டோரிடமும் விடப்பட்டன. கற்றதைக் கக்கும் கிளிப்பிள்ளைகள் போன்றவர்கள் குறைந்த சம்பளம் பெற்று ஆசிரியர்களாயினர். பாட புத்தகங்கள் பெரும்பாலும் மதப் பிரச்சார ஏடுகளாயின. பூமி தட்டை என்று கூறும் புராணங்களும், பூமி உருண்டையென்னும் விஞ்ஞானப் பாடங்களும் கலந்தே கற்பிக்கப்பட்டன. இதன் பலனாக ஆங்கிலம் அரியாதனமேறிற்று. ஆங்கிலம், வடமொழி ஆகிய இருமுனைத் தாக்குதலால் தமிழ் குற்றுயிராகிவிட்டது. கல்வியின் விலை அதிகமானதலால் பலர் கல்வி கற்க முடியவில்லை ஆங்கில நாகரிகம் பரவியது. நவீன விஞ்ஞானம் பெருகி மனித வாழ்வை நெருங்கியது. அந்த விஞ்ஞான ஒளி முன் மத இருள் கலைந்து மதக் கருத்துக்கள் ஆட்டங் கொடுத்து விட்டன. நாளுக்கு நாள் பகுத்தறிவு புத்தொளி பரப்பிக்கொண்டு வருகிறது.

இந்த அநுபவத்தையும் சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு தான் நாம் புதிய கல்வித்திட்டம் அமைக்க வேண்டும்.

அரசியல் சுதந்திரமும், பொருளாதார சமத்துவமும், சமூக சகோதரத்துவமும் கொண்ட சமதர்மச் சமுதாயத்தை உருவாக்குவதே நமது கல்வித்திட்டத்தின் இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

கிராமந்தவறாமல் ஆரம்பப்பள்ளிக்கூடம் இருக்கவேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் அளிக்கவேண்டும். 5 மைலுக்கொரு நடுத்தரப்பள்ளி, 10 மைலுக்கொரு உயர்தரப்பள்ளி, தாலுக்காவுக்கொரு கல்லூரி, ஜில்லாவுக்கொரு பல்கலைக்கழகம், விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகங்கள், ராணுவப் பள்ளி, தொழிற்கூடங்கள் முதலிய பலவகைப்பள்ளிகள் நிறுவவேண்டும். அங்கே ஆசிரியர்களுக்கு வீடுகளும் கட்டவேண்டும்.

அரசாங்கமே சகலபள்ளிக் கூடங்களையும் ஏற்று நடத்தவேண்டும். அப்போதுதான் ஒரேவித இலட்சியத்தைப் புகுத்த முடியும். செலவுக்குப் போதிய நிதியை வரிவிதிப்பின்மூலமும், மடாதிபதி, ஆலைமுதலாளி, ஜெமின்தார் சமஸ்தானதிபதி ஆகிய வேண்டாத இடைத்தரகர்களை ஒழிப்பதன் மூலமும் ஆலயச் சொத்துக்களை வசப்படுத்துவதன் மூலமும் திரட்டிக் கொள்ளவேண்டும். கல்விக்காக உதவாத செல்வம் எந்த மூலையிலும் தேவைக்கு மிஞ்சித் தேங்கிக் கிடப்பதை அனுமதிக்கக்கூடாது.

புத்துணர்ச்சியும், திறமையும், தமிழ்ப்புலமையும் நிறைந்த ஆசிரியர்கள் வேண்டும். அவர்களுக்கு இனமாக வீட்டுவசதியும், நிறைந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

## கேள்வியும் பதிலும்

10-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்கை, திட்டங்களின் வெற்றிக்கான வகையில், சக்திக்கும் நிலைமைக்கும் ஏற்றவகையில் உழைக்கவும் முன்வரும் ஒரு குழுவும், என, மூன்று குழு உண்டு. முதலாவது, மிகச் சிறியதாகவும், இரண்டாம் குழு அதைவிடச் சற்று விரிவானதாகவும், மூன்றும் குழு, விரிந்தும் பரந்தும் இருக்கும். இந்த மூன்று குழுக்களிலே, எல்லாவற்றிலும் ஏக காலத்தில் உள்ளவர்களும் உண்டு; ஏதேனும் ஒன்றில் மட்டுமே இருப்போர் உண்டு; ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்வோரும் உண்டு. அந்தச் 'செல்வது' பொதுக் குழுவிலிருந்து, பிரசாரக்குழு—பிரசாரக் குழுவிலிருந்து பொறுப்பாளர் குழு, என்ற முறையில் செல்வதுமுண்டு, அதற்கு மாறாக, பொறுப்பாளர் குழுவிலிருந்து பிரச்சாரக் குழுவிற்கு, பிரச்சாரக் குழுவிலிருந்து பொதுக் குழுவுக்குச் செல்வதாகவும் அமைவதுண்டு. அவரவர்களின், தொண்டு, திறமை, எண்ணம், நிலைமை, இதற்கேற்ப, இந்தப் பயணம் அமையும். நான், இந்தப் பயணத்தில், பொறுப்பாளர் குழுவிலிருந்து கிளம்பி, இப்போதுபொதுக் குழுவில் இருக்கிறேன். ஒதுங்கி இருக்கிறேன் என்பதற்கு இதுதான் பொருள். கட்சியின் கொள்கை—திட்டம்—ஆகியவற்றை அமைத்தல்—நடைமுறை வேலைகளை மேற்கொள்ளுதல் ஆகிய அலுவல்கள் எனக்கு இல்லை. கேள்வி கேட்கும் நண்பர்களிலே, பெரும்பாலானவர்கள் உள்ள 'பொதுக் குழுவில்' நான் இருக்கிறேன். பயணம், இதோடு முடியுமா, மீண்டும், பயணம், 'மேல்புறம்' செல்லுமா, அல்லது, பொதுக் குழுவிலும் இராது போவீரா, என்று கேட்கத் தோன்றும் நண்பர்களுக்கு. நானறியேன் பராபரமே என்பதுதான் என் பதில். ஆனால் இதிலே எதனையும் உண்டாக்கக் கூடிய சக்தி நண்பர்களுக்கு-மூன்று குழுக்களில் உள்ளவர்களுக்கும் உண்டு. அதாவது அவர்கள் தங்களுடைய ஆர்வத்தின் கூர்மையால், என்னை, இப்போது நான் உள்ள பொதுக் குழுவிலிருந்தும் விரட்டிவிட முடியும் — அதேபோல, நல்லெண்ணமும், எதையும் மிகமிகக் கூர்ந்து கவனித்து முடிவு செய்ய வேண்டும் என்ற போக்கும் கொள்வார்களானால், பொதுக் குழுவிலிருந்து மீண்டும், பொறுப்பாளர் குழுவில் நான் போகச் செய்யவும் முடியும். இந்த இரண்டையுமே செய்யாமல், ஏதோ ஓர் குழுவில் இருக்கட்டும், என்று இருந்துவிடுவதுதான், நண்பர்கள், எனக்கு மட்டுமல்ல, கழகத்துக்குச் செய்யக்கூடிய மிகச் சிறந்த தொண்டு. எந்தக் கட்சியிலும், கட்சியினர், இந்த மூன்று வகையினதான குழுக்களில், ஏதேனும் ஒன்றில் இருப்பது போதும், என்ற அளவு எண்ணமுடையோரே அதிகம். இந்தமூன்று குழுக்களில், எதில் இருப்பதால், இன்றைய நிலையில் கட்சிக்கு நல்லது, என்று, நான் யோசித்துப் பார்த்துச் செய்த முடிவுதான், பொதுக் குழுவில் இருப்பது என்பது. இந்நிலையில் இருந்துகொண்டு, 'திராவிட நாடு' இதழ் மூலம் நான் வெளியிடும் கருத்துகள், கழகப் பொதுக் குழுவினன் என்ற முறையில் அமைகிறது. இந்தக் கருத்துகள், பொறுப்பாளர் குழு, நடைமுறைக் குழு எனும் இரு குழுவினராலும், பொதுக் குழுவிலுள்ள ஒரு தோழனின் கருத்து என்று கவனிக்கப்படும் அளவிலும், பொதுக் குழுவினர், நம்மிலே ஒருவன் இது போல எண்ணுகிறான் என்ற அளவிலும், இருந்தால் போதும்.

✲

11-ம் பக்கத் தொடர்ச்சி

ஊதியமும் கொடுக்கவேண்டும். ஆசிரியர் ஒத்துழைப்பு இல்லையெனில் எத்தகைய கல்வித்திட்டமும் உருப்படாது.

இயற்கையும், வீரமும், காதலும், விஞ்ஞானமும் கொண்டு, ஆற்றொழுக்குப் போன்ற இனிய செந்தமிழிலே புதிய பாட புத்தகங்கள் புனையவேண்டும். மதத்திலிருந்து சாதி முதலிய பேதமும், பேதத்திலிருந்து துவேஷமும், துவேஷத்திலிருந்து கலகமும் பிறந்து சமத்துவத்துக்கும் சகோதரத்துவத்துக்கும் வேட்டுவைப்பதால் மதக் கல்விக்கு இடமில்லை. புராணங்களும் இதிகாசங்களும் பாட புத்தகத்தில் ஏறமாட்டா.

இதன்பலனாகத் தமிழ் மீண்டும் அரியணை ஏறும். தமிழ்ப்பண்பும் நாகரிகமும் பரவும். சமதர்மம் நிலவும்.

முதலில் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து அதன் பலனை அடிப்படையாகக்கொண்டு மேலும் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கவேண்டும். முழுமூச்சுடன் முயன்றால் மூன்று ஐந்தாண்டுகளுள் ஏனையநாடுகளைப் போலவே கல்வியில் நாமும் ஏற்றம் பெறலாம்.

✲


### தங்களிடம் உள்ளதா? இல்லையானால்,

ரூ. 5 M. O. அனுப்பினால், தபால் செலவின்றி அனுப்புகின்றோம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது? | 0 | 6 |
| 2. திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| 3. பெண்கள் உலகம் அன்றும் இன்றும் | 0 | 12 |
| 4. மனிதன் எப்படித் தோன்றினான்? | 0 | 8 |
| 5. கவிஞர் விழா 6 ஓரங்க நாடகங்கள் | 0 | 6 |
| 6. தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? | 0 | 4 |
| 7. முச்சங்கம் | 0 | 8 |
| 8. தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.) | 0 | 8 |
| 9. எது இசை (பாரதிதாசன) | 0 | 6 |
| 10. பாம்பு வணக்கம் | 0 | 4 |
| 11. சிந்து வெளித் தமிழர் | 0 | 8 |

**முத்தமிழ் நிலையம்**
சென்னை—1. (பீட நம்பர் 14.)



### மாணவர் காலண்டர்

"அண்ணாமலைநகர் திராவிட மாணவர்கழக நிதிக்காக—மாணவர் கழகச்சார்பாக முதன் முதல் வெளிவரும் காலண்டர். அழகானபடம், அறிஞர்களின் அறிவுரைகள் ஒருங்கே அமையப்பெற்றது. புதுச் சரித்திரசம்பவங்களைத் தெரிவிக்கும் மாத இதழ் கொண்டது. விலை ரூ. 1. எல்லாகிளைமாணவர் கழகங்களும் உடனே தேவைக்கு எழுதவும்.

செயலாளர்
திராவிட மாணவர்கழகம்
அண்ணாமலை நகர்

# இரட்டை நாவினர்!

அதிகாரம், கள்ளினும் காமத்தினும் போதை மிக்கது. அதிக அதிகாரம் அளவு கடந்த போதையைக் கொடுக்கும். அதிகாரத்தைக் கையாண்டு ஒரு முறை அனுபவப்பட்டுவிட்டவர்கள், வெகு சுலபத்தில் அதனைக் கைவிடத்துணியார். என்றும் தன்னிடத்திலேயே அதிகாரம் சிரஞ்சீவியாக நிலைத்திருக்கப் பார்த்துக்கொள்வதில் மிக்க கவலை எடுத்துக் கொள்வர். அதிகாரம் தரும் மயக்கத்தில் சிக்கிக் கொண்டவர்கள் கண்களுக்கு, கூட்டுத்தோழர்கள் — நண்பர்கள் இடத்தும் கூடப் பகைமை கண்டு மிரளுவர். இந்நிலையில் ஒருசிறு எதிர்ப்பு—தன் சொல்லுக்கு ஒரு மாற்றுச்சொல்—போக்கை மாற்றிக்கொள்வதுமுறை எனும் வேண்டுகோள் எதுவும், தனது கையிலுள்ள அதிகாரத்தை அபகரித்துக் கொள்ளும் நோக்கத்தோடு எழுந்தவை என்றே நம்பிக் கொள்வர். எனவே, முன் கூட்டியே, இத்தகைய நிலைமை ஏற்படாமல் இருக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முனைவர். இந்தப் போக்கு — கோட்பாடு அரசியலில் பெரியதோர்நோயின் அறிகுறியாகும். மக்கள் ஆட்சி முறைக்கு, இது முற்றும் புறம்பானது. இதனை முளையிலேயே நசுக்கி ஒழிக்கவேண்டியது, மக்கள் ஆட்சி முறையில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களின் நீங்காக் கடமையாகும்.

அன்பர் ஆச்சாரியாருக்கு, அகவை எழுபது ஆகிறது. அவருடைய அறிவு, ஆற்றல் அபரிமிதமானது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்கமுடியாது.

இன்று அவர் மேற்கு வங்கத்தின் கவர்னர். அதாவது ஆட்சிப்பீடத்தின்தலைவராக இருக்கிறார். அவர் கையில் அதிகாரம் கிடைத்தால், அந்த அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவார் என்பதை, நாம், சென்னை மாகாணத்தின் பிரதமராக அவர் இருந்த காலத்தில் அனுபவித்திருக்கிறோம். கட்டாய இந்தி நுழைப்பால், தமிழரிடை ஏற்பட்ட கொதிப்புணர்ச்சியும், அதற்காக மக்கள் எடுத்துக்கொண்ட அமைதியான நடவடிக்கைகளை அடக்க அவர் அதிகார பீடத்திலிருந்து கொண்டு கையாண்ட அடக்குமுறைகளையும், இதற்குள் மக்கள் மறந்துவிட்டிருக்கமாட்டார்கள். குட்டிக் கதைகள் பலகூறி, தமது கோணல் போக்கிற்கு ஆதரவு தேடினதையும், அதுபோதிய பயனளிக்காமல், எத்திக்கினும் பார்க்கின்றவர்களை எல்லாம் எதிரிகளாகக் கண்டு எரிச்சல் கொண்டதும், எந்தச் சட்டத்தை ஒழிக்கவேண்டுமென அதிகாரம் இல்லாத நேரத்தில் அன்பர் ஆச்சாரியார் ஆர்ப்பரித்தாரோ, அதே சட்டத்தை வெட்கம் துளியுமின்றி—நெஞ்சு நடுக்கமின்றி, கட்டாய ஹிந்தியை எதிர்த்தவர்கள் மீதுபிரயோகித்து மகிழ்ச்சி அடைந்தார். பிரசாரமுனை அவரினத்தின் சொந்தச்சொத்தாக இருந்தகாரணத்தினால், அவரின் அடாத செயல்—அதிகார மமதை, அவனி எங்கும் கண்டனத்திற்கு உள்ளாகும் முறையில் விளம்பரப்படுத்தப் படாமல் மறைக்கப்பட்டு விட்டது.

அவருடைய நிஜ உருவைப் படம் பிடித்துக் காட்டும் தன்மையில், இன்று வங்கத்தில் அவருடைய போக்கு இருக்கிறது. பாதுகாப்புச் சட்டம் எனும் பெயரில் ஒவ்வொரு மாகாணத்திலும், இன்று அதிகார பீடத்திலுள்ளவர்கள் புதிய சட்டமியற்றும் பணியில் முனைந்துள்ளனர். 'ஆபத்தானவர்' என்று ஆளுவோர் தீர்மானித்துவிட்டால், ஒருவரைச் சிறையில் அடைக்கவும், வீட்டிலேயே காவல் வைக்கவும், போலீஸ் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கவும், பாதுகாப்புச் சட்டத்தில் இடமிருக்கிறது. இதுபோன்ற ஆள்தூக்கிச் சட்டத்தை ஏற்கனவே ஏகாதிபத்திய அரசாங்கம் கையாண்டது. இன்று அதிகாரத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்களில் பலர் அக்கொடுஞ் சட்டத்தால் அவதிக்குள்ளானதும், அதனை ஒழித்துக்கட்ட வேண்டுமென இத்தலைவர்கள் இடையறாது உழைத்ததும், அதன் விளைவாக மக்களுக்கு ஆளுவோர் மீது வெறுப்பேற்பட்டுக் கொதிப்பேறிக் கிளர்ச்சி செய்ததும் வெளிப்படை இரகசியமாகும். 'நம்மவர்' அதிகாரத்தில் அமர்ந்துள்ள இந்த நேரத்தில், அதே முறையான அக்கிரமச்சட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியமென்ன? ஏகாதிபத்யப் பிடியில் மக்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்கள் பலவும் 'நம்மவர்' ஆட்சியிலும் பரிகரிக்கப்படாமல் அப்படியே இருக்கும் என்பதா அதிகாரத்திலுள்ளவர்கள் நம்பிக்கை? மக்களுக்கு நலம் பல செய்யும் பண்புடையவர்களாக-அதற்கான திட்டங்கள் கொண்டவர்களாக ஆளவந்தார்கள் இருப்பார்களானால், ஏகாதிபத்யம் கைக்கொண்ட அதே முறையால், ஏன் ஆட்சி செலுத்த நினைக்கவேண்டும்? ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்தின் கண்களுக்குத்தான், அதன் தாளடி தொழுது கிடந்தவர்களைத் தவிர்த்து மற்றவர்களெல்லாம், அரசாங்க விரோதிகளாகத் தெரிந்தனர். அதேபோக்கு, 'நம்மவரு'க்கும் ஏன் இருக்கவேண்டும்? ஏகாதிபத்தியம் கொண்டிருந்த கோட்பாடே, அதாவது மக்களைச் சுரண்டும் நோக்கமே, இன்றும் ஆளவந்தார்களின் இலட்சியமாக இருக்குமானால், அத்தகையவர்களுக்கு இதுபோன்ற அக்கிரமச் சட்டங்களின் துணை அவசியம் வேண்டியதுதான்!

'இன்றியமையாத தொழில்'களில வேலை நிறுத்தம் செய்யும் நிலைமை ஏற்பட்டு, அவ்வாறு செய்யத்தூண்டுபவர்களுக்கும், அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கைத் தேவை பூர்த்தி அடைய வேண்டுமென்று சொல்லுகிறவர்களுக்கும் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத தண்டனை, இச்சட்டத்தின்படி அளிக்கப்படும்.

இரப்பர் போன்று இழுத்த அளவிற்கு நீளும் போக்கிலுள்ள 'பலாத்கார மிரட்டல்' எனும் மறையில், ஒருவரை ஐந்து வருஷம் சிறையிலடைக்க இச்சட்டம் அனுமதிக்கிறது.

ஹெட்கான்ஸ்டேபிளும் எவரையும் விசாரணையின்றி கைது செய்யவும், ஒலிபெருக்கிகளை உபயோகிப்பதைத் தடை செய்யவும், பத்திரிகைகளில் வரும் செய்திகளை முன்கூட்டியே கணிக்கை செய்யவும், இதுபோல உரிமை பலவும் இப்பாதுகாப்புச் சட்டத்தின்மூலம், மக்களிடத்திலிருந்து பறிக்கப்படுகிறது.

இதனைக்கண்டு வங்க மக்கள் கொதித்தெழுந்தனர். சட்டசபையை முற்றுகை இட்டனர். கண்ணீர்ப்புகையும், தடியடியும், துப்பாக்கிவேட்டும் பயனளிக்கவில்லை. சட்டசபைக் கூட்டத்தையே ஜனவரி 4-ந் தேதி வரையில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது பாதுகாப்பு மசோதாவை வியாஜ்யமாகக் கொண்டு, பொதுத்தேர்தல் நடத்த முன்வர வேண்டுமென, சரத் சந்திரபோஸ், மந்திரி சபையினருக்குச் சவால் விடுத்துள்ளார். வங்காளப் பாதுகாப்புக்கு எனும் பெயரால் மந்திரி சபையைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றும், இதே மசோதாவை—இடைக்கால அவசரச் சட்டமாக லீக் மந்திரிசபை கையாண்டபோது இன்றுள்ள காங்கிரஸ் சட்டசபை அங்கத்தவர்கள் எதிர்த்தனர் என்றும், 'அதிகார போதையில் வெறித்துப்போய் இருப்பவர்கள் அதனையே நிரந்தரச் சட்டமாக்கத் தயங்கவில்லை' என்றும் சரத்பாபு விளக்கிக் கூறுகிறார்.

சரத்தபாபுவை, ஏகாதிபத்திய தாசர் என்றோ, தியாகம் தெரியாத பதவி வேட்டைக்காரரென்றோ, எவரும் கூறத்துணியார். நாட்டைப் பிறரிடம் காட்டிக் கொடுக்கும் பண்புடையவரும் அல்ல அவர். அவரைத் தேசத்துரோகி என்று கூற எவர் மனமும் ஒருப்படாது. அவர் கூறுகிறார் அதிகாரத்திலுள்ளோர், அதன் மயக்கத்தால் வெறிகொண்டுள்ளனர் என்று.

ஆளவந்தார்களிடத்தில் அன்பு காட்டாது, அவர்கள் இட்ட கட்டளைக்குச் சிரம் வணங்காது, அங்கு மக்கள் அதட்டிக் கேட்பதும் கிளர்ச்சி செய்வதும், ஆட்சித் தலைவரான ஆச்சாரியாருக்குத் திகைப்பும் எரிச்சலையும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆச்சாரிய புருஷரல்லவா அவர்! இதோ உபதேசம் செய்யமுனைந்துள்ளார்.

"தற்கால சமுக வாழ்க்கை தொழிலாளரைப் பொறுத்திருக்கிறது. ஸ்பான ரீதியாகஒத்துழையாமையை மேற்கொள்ளுவதில் தொழிலாளர்களுக்குள்ள பலமும் உண்ணா விரதங்களும், பொதுச் சேவையையே கறைபடுத்தும் ஆர்பாட்டக் கூச்சலும், நாசவேலை முறையும் தனிநபரின் சொந்த ஆவலைப்பூர்த்திச் செய்வதற்கு பயன் படும்."

இவ்வாறு கூறிவிட்டு 'ஆற்றல்' அதிகமுள்ள ஆச்சாரியார், 'தேசபக்தி' இல்லாத ஸ்தாபனங்களையும் சமுக எதிரிகளையும் அடக்குவதில் அதிகாரத்திலுள்ளோர் மேற்கொண்டிருப்பதை வரவேற்கிறார். இக்காலத்தில், 'சுதந்திரத்திற்குக் கொண்டுள்ள கோட்பாடுகளைபன்னிப்பன்னி பேசுவதற்கு இது தருணமல்ல' எனவும் உபதேசம் செய்கிறார்.

'தேசபக்தி' எனும் வார்த்தைக்கு இச்சூழ்நிலையில் கொள்ளத்தக்க பொருள் எதுவென்றும், இன்று நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கட்சிகளில் எது எது அவர் கூறும் 'தேசபக்தி' அளவு கோலுக்குப் புறம்பானது என்பதையும், ஆச்சாரியார் விளக்க முனைந்திருந்தால், எவ்வளவோ நலமாக இருந்திருக்கும், ஆச்சாரியாருடைய 'அறிவிலும் ஆற்றலிலும்' நம்பிக்கை கொண்டிருக்கும் நண்பர்களுக்கு.

பழைய அதிகார வர்க்கத்தினிடமிருந்து அதிகாரத்தைக் கைபற்ற விழைந்தவர்கள், அதிகாரம் தங்கள் கைக்கு மாறிவிட்ட பின்னர், ஏகாதிபத்தியம் கையாண்ட அதே அடக்குமுறைச்சட்டங்களைச் சற்றுவிரிவாகவும் கடுமையாகவும் கையாள முற்படுவது, ஏகாதிபத்திய போக்கிலும் 'நம்மவர்' முறை மாறுபட்டது என்று ஏற்பட்டுவிடாது. அதற்குப் பதில் ஏகாதிபத்திய போக்கிற்கும் ஆள் மாற்றத்தைத்தவிர, அதிகமாற்றத்தை அடைந்துவிடவில்லை என மககள் நினைக்கவும், விடுதலையின் ஆரம்பக் கட்டத்திலிருக்கிறோம் எனும் எண்ணம் உண்டாகி, மேலும் உண்மையான விடுதலை அடைவதற்குக்கிளர்ச்சிச் செய்யவும் மக்கள் முந்துவர். இந்த மக்கள்விருப்பத்தை அடக்குமுறை கொண்டு தகைத்துவிட முடியாது. அடக்குமுறை பயனளித்து இருக்குமானால், இன்று அதிகாரபீடம் ஆச்சாரியாரை ஏற்றுக்கொண்டிருக்காது. பரணசாலை வாசம்தான் ஆச்சாரியாரின் புகலிடமாக இருந்திருக்கும். அதிர்ப்தி கொண்ட மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்குப் பதில், அடக்குமுறையால் விருப்பத்தையே இல்லாமல் அழித்துவிடத் தீர்மானித்துச் செயலாற்றுவது, ஆரம்பத்தில் வெற்றியை அளிப்பதுபோல் காணப்பட்டாலும், மக்களின் உண்மையான குறைகள் போக்கப்படாதவரையில், மக்களின் உள்ளம் எரிமலையாகத்தான் இருக்கும். மக்கள சக்தியை மதிக்காது மாநிலம் புகழ ஆண்டவர்களும், அடக்குமுறைக்குத்தூபதீபம் போட்டு வளர்த்து வந்தவர்களும், அடைந்த முடிவைவரலாற்று ஏடுகள் எடுத்துக்காட்டுவதை ஆச்சாரியார் அறியாரா?

காலத்தோடு சுதந்திரத்திற்குள்ள கருத்தும் மாறுபட்டேதீரும். ரிஷிகள் காலம் மலையேறி நீண்டநாள்ஆகிவிட்டது. கண்ணன் காட்டிய வழியோ, வியாசர்ஊட்டிய விருந்தோ காலத்தால் கவர்ச்சியற்றுப் போனவைகள். இன்றும் அதனை நாட்ட முயற்சிப்பது வீண். அதிகாரம் அதனைச் சாதித்துவிடாது. அதிகாரம் தரும் வெறியில் சித்த சுவாதீனம் அற்று இருப்பவர்களுக்கு, அடக்குமுறையிலே நாட்டஞ் செல்லுமேயன்றி, அன்பால் அணைக்கும் பண்போ, பிறர் கூறும் நல்லுரையோ பயனளிக்கும் முறையாகப் புலப்படுவதில்லை.

நாம், இன்று வசிப்பது இருபதாவது நூற்றாண்டின் மத்தியில். இந்தக்காலத்திற்குப் பொருத்தமான சுதந்திரசித்தாந்தகள் தான் நமக்குச் சிலாக்கியமானவை—ஒத்துவரக்கூடியவை. காலத்துக்கொவ்வாத, மக்களுக்கு இதம் செய்வதற்கு பதில் தீமை தரும், சென்றகால சுதந்திரக் கோட்பாடுகளை — அது எவ்வளவு சிறப்புடையதாகத் தோன்றினும், தெய்வமே தீட்டினதாகக் கூறப்படினும், இன்றுள்ள மக்கள்மீது, அதனைத் திணிக்க ஆசை கொள்வதும் முற்படுவதும் விரும்பக்கூடியதல்ல. அந்தக்காலத்தில் சமுதாய ஏணியின் மேல்படியில் இருந்து வந்தவர்கள், தங்கள் நிலைஎன்றும் சரியாமல்இருப்பதற்காக, பரமாத்மாவின் பெயர் சொல்லியும்—வேதத்தின் சாரமென்று செப்பியும், யோக யாக ரிஷிகளின்ஆணை என்று அறிவித்தும், ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டனர். இதனால் சிலருக்குச் சுகபோகப்பிராப்தியும், பலருக்கு நீங்கா இடும்பையும் ஏற்பட்டது. சோம்பேறிகளுக்கு இந்தச் சுகவாழ்வு என்றும் நிரந்தரமாக இருக்கவேண்டும் எனும் தீயசிந்தனையோடு, இன்னார் இன்னாருக்கு இன்னின்ன கடமை எனவும், இதனை எவரும் மீறுதல் கூடாதெனவும், மீறுபவர்களை எண்

னு தற்கே நடுங்கும் கொடுந்தண்டனைகளை விதித்தல் வேண்டுமெனவும் முறையை வகுத்தனர். இந்த அக்கிரமமுறையை விவாதித்துக்கூறும் ஏடுகளுக்கு தர்மசாஸ்திரங்களெனப் பெயரிட்டனர். ஏற்படுத்தினவர்கள் மறைந்து எவ்வளவோ காலமாகியும், இந்த விதிகள், தங்கள் இனத்தவர்களுக்கும் தங்களைப்போன்றோர்களுக்கும் நற்பயனை அளிப்பதைக்கண்டு, பின்சந்ததியார்களும், இந்தக்கொடுங்கோன்முறையை அழிய விடாமல் பார்த்துக்கொண்டனர். அதேதர்மங்களில நம்பிக்கை கொண்டு, இன்றைக்கும், அவைகளால் ஏற்படும் துன்பங்களை எல்லாம் சகித்துக்கொள்ளவேண்டுமென்றும், ஆச்சாரியார் பேசுவதும், எதிர்த்தவர்மீது அடக்குமுறையை வீசுவதும், கடமையைச்செய்யுங்களெனக் கதறுவதும், அடாதசெயல என்போம்.

மற்றோர் இடத்தில் அதே ஆச்சாரியார் பேசும்பொழுது, சகல துறைகளிலும் இருப்பவர்கள் தங்களுக்குத்தேவையானது கிடைக்கவில்லை எனக் கோபிப்பதாகவும், யாரோ கடமையைச் செய்யத்தவறிவிட்டதாகச் சகலரும் கருதுவதாகவும், கோபிப்பதினால் இந்தியாவின் முன்னேற்றம்தடைப்பட்டுவிடுமென்றும், எனவே கோபத்தைக்களைந்து பொறுமை எனும் நளினக் கலையை அனைவரும் போற்றி வளர்க்கவேண்டுமென்றும், உதவாத உபதேசத்தை, தம்மால் மேற்கொள்ள முடியாத அறிவுரையை அள்ளி வீசியுள்ளார்.

மக்கள், பசி என்று பேசினால், ஆடை வேண்டுமே என்று அலறினால், வீடு இல்லையேஎன விம்மினால், வேலை கிடைக்காமல் வேதனை அதிகரிக்கிறதே எனக்கூவினால், பொறுமைப்பாதையை காட்டுகிறார்கள்ஆள வந்தார்கள். இதோ, என்னைப்பார்- என்னைச்சுற்றியிருக்கும் பட்டாளத்தைப்பார்—அவர்கள் கையில் இருக்கும் குண்டாந்தடியைப்பார்—அதோ சிறைக்கூடத்தைப் பார்—என அடக்குமுறையை ஏவிவிடும் போக்கினருக்கல்லவா, இந்தஅருமையான நளினக்கலை விருந்து தேவைப்படுகிறது. பிணியுண்டவனுக்கு மருந்து தருவதற்குப் பதில், நோய் இல்லாதவனுக்கல்லவா மருந்தளிக்க ஆச்சாரியார் முனைகிறார்.

“பொறுமை ஓர் நளினக் கலை” இதனை அதிகாரததிலுள்ளோர் என்றும் பேசத்தவறினதில்லை. இன்று மட்டுமல்ல, என்றும். இங்குமட்டுமல்ல, எந்த நாட்டிலும். முடிவு என்ன? ஆண்டவன் பலம், படை பலம், அனைத்தும் மக்கள் விழிப்புணர்ச்சியின்முன் தலைகாட்டாமல் தவிடு பொடியாகி, மக்கள் ஏவல்படி அதிகாரம் பணிந்ததுதான் முடிவு.

“பசி, பசி,” எனக்கதறும் நிலை மக்களிடை உள்ளவரையில், அவர்களிடத்தில் பொறுமையைப் பார்க்க முடியாது. “இங்கொருவனுக்குக் கூழில்லை எனில், கோலினை உடைத்திடுவோம்” எனும் புரட்சிக்கவிஞர் காட்டிய சிறந்தகலைதான், பசித்தவனுக்குப்பரிகாரம் தரக்கூடியஅருங்கலையாகும். அதனையேதான் மக்களுக்காற்றும் பெரும்பணியாக, நல்லாட்சி அமைக்கவிருப்பும் எவரும் மேற்கொள்வர். அந்நிலையை ஏற்படுத்துவதன் மூலந்தான் இந்தியா அல்ல மற்று எந்த நாட்டினையும் சிறந்தநாடாக மாற்றமுடியும். சமூகத்திலுள்ள சிலர் — வலுத்த வம்பர்கள் சிலர்—மற்றப் பெருவாரியான மக்களுக்கு என்று வகுத்துவைத்த வாழ்க்கைமுறைக்கு ஏற்படுத்திய கடமை, சிறப்பிழந்து எத்தனையோ காலமாகிவிட்டது. அதனை மீண்டும் இப்புவியிடைப் புகுத்தி நிலைநாட்டப் பார்ப்பதுநடைபெறாது. ஆண்டவன் பெயர்கூறினாலும், அந்தராத்மா ஆசீர்வாதம் கிடைத்தாலும், முன்னோர் வகுத்தவழி என முத்திரையிட்டாலும், அதிகாரத்தைக் காட்டிமிரட்டினாலும், சுடுகாடு தேடிச் சென்று கொண்டு இருக்கும் பிணத்திற்கு மீண்டும் புதுவாழ்வு கிடைத்துவிடாது. சுட்டெரித்துச்சாம்பலாக்கி ஆளும் அதிகாரத்தை அனைவருக்கும் பொதுவாக்குவதுதான் காலத்திற்கொத்த முறையாகும். இந்த நேரியமுறையையே விட்டுவிட்டு, இரட்டை நாக்குக்கொண்டு பேசுவது, அடக்குமுறைகொண்டு மக்களை வீழ்த்துவதும், தங்கள் அதிகார காலத்திற்கு விரைவில் முடிவேற்படுத்திக் கொள்வதற்கே பயன்படும்.

விடுதலைக்கிளர்ச்சியில் மக்களைத் தீவிரப்படுத்திய காலத்தில், விடுதலைகிடைத்த பின்னர் நலம் பலவும் ஏற்படும் என்று நம்பிக்கை கொண்டிருந்த மக்கள், ஆங்கிலேய அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாகி இம்சைக்குள்ளான தலைவர்களிடத்தில் பற்றும் பாசமும் காட்டிய மக்கள், ஜே கோஷம் போட்டதும்— வரவேற்பளித்ததும்— வாழ்த்தினதும்— மாலை மரியாதைகள் செய்து மாற்றம் கூறாதபின்தொடர்ந்ததும் — ஆச்சாரியார் போன்ற தலைவர்களுக்குத் தங்களைப் பற்றிய நினைப்பை அதிகரிக்கச் செய்திருக்கிறது. எதிர்பார்த்தபடி எதுவும்நடைபெறாமல், வாக்குறுதியளித்த புதுவாழ்வு கிடைக்காமல், ஏகாதிபத்திய முறையிலேயே ஆட்சிமுறை சென்றுகொண்டிருப்பதை கண்டு ஏமாற்றம்கொண்ட மக்களில் சிலர், ஆட்சியாளரின் போக்கில் தவறு கண்டாலும், இரண்டொன்றைத் திருத்திக்கொள்ள வேண்டுமென ஆசையை வெளியிட்டாலும், ஆட்சியுரிமையை அபகரிக்கவும் — பதவிமோகங் கொண்டுதான் அவ்வாறு செய்கிறார்கள் என்றும் கூறச் சொல்கிறது. மக்களின் எதிர்ப் பேச்சை என்றும் காதால் கேட்காது, வாழ்த்தொலிகளையே கேட்டு கேட்டுப் பழகிப் போய்விட்டவர்களுக்கு, இன்று மக்களிடத்திலிருந்து சிறு எதிர்ப்பேற்படினும், சினம் மிகுவதும், சிந்தனை குறைவதும் இயல்பேயாகும். அதிகாரம், அதுவும் பரிபூரணமான அதிகாரம் கையிலிருக்கும் காரணத்தால், அதனை உடனடியாகப் பிரயோகிக்கும் நினைப்பைத்தான் தரும். எனவேதான் இரட்டை நாக்கினால் பேசவேண்டியதாக இருக்கிறது. மக்களை மதிக்காது, மக்களை அடக்கியாளும் போக்கு, மக்கள் விழிப்படைந்து தேவையை உணர்ந்து, அதனைப் பெறுவதற்காகப் பணியாற்ற முற்படும்வரையில் இருந்தே தீரும். மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதின் மூலந்தான் இந்த இரட்டை நாக்கினர்களுக்கு, தங்கள் போக்குத் தவறுடையது என்பதை உணர்த்த முடியும்.

## நீத்தார் வழிபாடு

குமரன் அச்சகம், குமரன் காலண்டர் தொழிற்சாலை உரிமையாளரும்-காஞ்சி ஆயில் மில்ஸ் லிமிடெட் மேலாளரும் முகவருமான தவசி குப்புசாமி அவர்கள் 17—12—’47 இயற்கை எய்தினர். நிகழும் 1—1—48 வியாழக்கிழமை நீத்தார் வழிபாடு அவரது இல்லத்தில் நடைபெறும்.

## வரிப்பணம் பாழாகிறது.

சென்னைக் கார்ப்பரேஷன், வருகிறவர்கள்,போகிறவர்களை வரவேற்று, உபசரித்து, விருந்து செய்வதற்காக மட்டும் சென்ற ஆண்டில் ரூபா 13,626-9-8 செலவு செய்திருக்கிறது. பொதுமக்களின் வரிப்பணம் எப்படிப் பாழாகிறது பாருங்கள்.

## முதற்குலோத்துங்கன்

8-ம் பக்கத் தொடர்ச்சி

கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

### குடவோலை முறை

பொதுமக்கள், கிராம சபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப் பெறுவது வழக்கமாகும். தேர்ந்தெடுப்பதற்குக் குறிக்கப்பெற்ற நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுதற்கு அமைக்கப்பட்டுள்ள மாளிகையில், அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறுகவுள்ள அனைவரும் கூடுவர். ஆங்கு ஒரு குடம் வைக்கப்பெறும். அங்குள்ள நம்பிமாருள் வயது முதிர்ந்தார் ஒருவர் அக்குடத்தை எடுத்து அதனுள் ஒன்றுமில்லையென்பதை எல்லோரும் அறியக் காட்டிக் கீழேவைப்பார். உடனே, அவ்வூரில் ஒவ்வொரு குடும்பிலுள்ளாரும் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்றுவோர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்கு சேர்த்து, அவை எக்குடும்பிற் குரியவை என்பது நன்கு புலப்படுமாறு அக்குடும்பின் பெயர் வரையப் பெற்ற வாயோலை யொன்றைச் சேர்த்துக் கட்டி, அக்குடத்தில் இடுவர். பின்னர், அம்முதியார் அங்கு நடைபெறுவதை புணராத ஓர் இளைஞனைக் கொண்டு அக்குடத்தினின்றும் ஓர் ஓலைக்கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து, வேறு ஒரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஓர் ஓலையை அச்சிறுவனைக் கொண்டு, எடுக்கச்செய்து அதனைத் தாம் பெற்று, அங்குள்ள கரணத்தான் (கணக்கன்) கையிற் கொடுப்பார். அவன் தன் ஐந்து விரல்களையும் விரித்து, உள்ளங்கையில் அதனை வாங்கி அவ்வோலையில் எழுதப் பெற்றுள்ள பெயரை அங்குள்ளோர் யாவரும் உணருமாறு படிப்பான்.

பின்னர், அங்குள்ள நம்பிமார் எல்லோரும் அதனை வாசிப்பர். அதன் பிறகு, அப்பெயர் ஓர் ஓலையின்கண் வரைந்து கொள்ளப்படும். அவ்வோலையிற் குறிக்கப்பெற்ற பெயருடையவரே அக்குடும்பிற் குரிய கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆவர்.

### ஆளுங்கணத்தார்

இங்ஙனமே, மற்றைக் குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர், அவர்களுள் வயதினும், கல்வியினும் அறிவினும், முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் சிலர் ஏரி வாரியராகவும், சிலர் பொன் வாரியராகவும், சிலர் பஞ்ச வாரியராகவும், ஏற்படுத்தப்படுவர். எனவே கிராமசபை, சம்வத்சரவாரியம், தோட்ட வாரியம், ஏரிவாரியம், பொன் வாரியம், பஞ்ச வாரியம் என்ற ஐந்து உட்கழகங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும். நிலங்களுக்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவித்தல்ஏரிவாரியரது கடமையாகும். நிலத்தைப் பற்றிய எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுதல் தோட்டவாரியரது கடமையாகும். பலவகையாலும் வாங்கப்பட்ட பொற்காசு செப்புக்காசுகளை ஆராய்வது பொன் வாரியரது கடமையாகும். பஞ்ச வாரியரது கடமையாதென்பது இப்போது புலப்படவில்லை. இச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் எனப்படுவான். இவனை மத்தியத்தன் எனவும் கூறுவதுண்டு. நல்வழியில ஈட்டிய பொருளும் நல்லொழுக்கமும் உடையவனையே கரணத்தானுக அமைப்பர். இவன் கணக்கு எழுதல் வேண்டும். எழுதிய கணக்கைச் சபையார் விரும்பியபோது தானே நேரில் காட்டவேண்டும். இவன் சபையாரின் நன்மதிப்பைப் பெறுவிடில் அடுத்த ஆண்டில் இவனுக்கு அவ்வேலை கொடுக்கப்பட மாட்டாது.

ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும், ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறைகளும் கணக்கனுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுவது வழக்கம்.

### தண்டனை முறை

இனி, நியாய விசாரணை நடாத்தும் சம்வத்சரவாரியர் கொலை செய்தவனுக்குக் கொலைத் தண்டம் விதித்தலும் பிறவற்றிற்குச் சிறையிடுதலும் தளையிடுதலும் பொன் தண்டம் விதித்தலும் வழக்கமாகும். அறியாமையால்தற்செயலாகநேர்ந்த சாவிற்கெல்லாம் அவ்வவற்றிற்கேற்றவாறு பொன் கொடுக்குமாறு சபையார் தீர்ப்புக் கூறுவர். வேட்டைக்குச் சென்றோன் ஒருவன் எய்த அம்பு, குறி தவறி ஓர் உழவன் மேற்பட்டு அவன் இறந்ததற்கும், ஒருவன் தன் மனைவியைத் தள்ள அவள் விழுந்து இறந்தமைக்கும், ஒருத்தி தன் மகள் மீது எறிந்த கோல்பட்டு அண்மையில் நின்ற வேறொரு பெண் மாண்டதற்கும், சிறு சிறு தண்டனை விதித்தனரே யன்றி அன்னோர்க்கு கொலைத் தண்டம் விதித்திலர். ஏற்றுக்கொண்டகடமைகளை நிறைவேற்றுது தொழிந்தவர்க்குப் பொன் தண்டம் விதித்தல் வழக்கம் என்பதும், அவர்கள் அதனைக் கொடாது ஓடிவிட்டால், அன்னோரது வீடு, காணி முதலியவற்றை அரசனது ஆணையின்படி ஊர்ச் சபையார் ஒழுங்கு செய்தல் வழக்கம் என்பதும் பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன. சோழ மன்னனுகிய முதற்குலோத்துங்கன் கி. பி. பதினோராவது நூற்றுண்டில் இருந்தவன்.

## ஜுரத்தைத் தடுக்கும் புல்

மைசூர் அரசாங்கத்தின் பலவிதச் செடிகளைப் பயிர் செய்யும் தோட்டத்தில், ஒருவகை புல் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அது மலேரியா ஜுரத்தை தடுக்கும் ஆற்றல் கொண்டிருக்கிறது. அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து விசேஷமாக, இப்புல் கொண்டுவரப்பட்டது.

பிரேசில் நாட்டில் இருந்து இப்புல்முதலில்கொண்டுவரப்பட்டதாம். நெடிதரும் வாடையுடையதாக இருக்கிறதாம். ஈ, கொசு, பாம்பு முதலியன, இப்புல்லை நெருங்குவதும் கிடையாதாம். அத்துடன் இப்புல்லை மேயும் கால்நடைகள் நன்றாக வளர்கிறதாம். எல்லாவகைப் புற்களிலும் குதிரைக்கு இது சத்தான உணவாக மதிக்கப்படுகிறதாம். எட்டு அல்லது பத்து மாதங்களில்இப்புல் பூ எடுத்து விதையளிக்கிறதாம். விருப்பத்தோடு கால்நடைகள் இதனை உண்கிறதாம்.

# பண்டித நேருவின் கண்முன்!

—●—

இந்த நாட்டில் ஏழையின் சராசரி வருமானம் இரண்டே அணுதான். இந்நிலையில் அவன் எப்படிச் சுகவாழ்வு பெறுவது? அவனுடைய வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு உயர்த்திக் கொள்வது? அரை வயிறு கஞ்சிக்கும், அவன், அவதி பல படவேண்டியதாகத்தானே இருக்கிறது! ஏகாதிபத்யப் பிடியினால் வந்த அவல வாழ்வல்லவா இது! பிடி அகன்று, நாட்டுத் தலைவர்கள் கைக்கு ஆட்சியுரிமை கிட்டுமாயின், மக்கள் வாழ்வு வளப்படுமே—அப்போது எவர் குறுக்கீடுமின்றி, தலைவர்கள் நினைத்ததைச் செய்து முடிக்கலாமே—என்றெல்லாம் பேசினர். இன்றும் பேசுகின்றனர். மக்கள் எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்ப்பது இயற்கையுமாகும். குற்றம் மக்களுடையதல்ல. மக்களை, இவ்வாறு நம்பிக்கை கொள்ளும் அளவிற்குப் பலமான பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றும் செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளையன் ஆட்சியால் இங்கு, தேவையான அளவிற்குத் தொழில் உருவாகவில்லை. சொந்த நாட்டின் நன்மையை உத்தேசித்து, இந்த நாட்டில் புதுத்தொழில் பலவும் காண வெள்ளையன் முற்படவில்லை. கிடைத்துள்ள அரசியல் ஆதிக்கத்தை தன்னாட்டின் பொருள் செழுமைக்கே, இந்நாட்டில், நாட்டுமக்களின் மூலதனம் கொண்டு புதுத்தொழில் பெருக முடியாமல், கட்டுப்படுத்தி விடுகிறான். எனவே இங்கு செல்வம் பெருகவழியில்லை. மக்கள் தொகைக்கேற்ப, இங்கு பொருள் உற்பத்தி அதிகரிக்கவில்லை. ஆதலால் மக்கள் பசியாலும், பஞ்சத்தாலும் மடிகிறார்கள். வெள்ளையன் வெளியேறிவிட்டால், இந்த இல்லாமைத் தொல்லை எவ்வளவோ தொலைவில் நின்றுவிடும். மக்களின் வறுமை தொலைந்த, தேவை குறைந்த மகோன்னத புரியாக, இந்தப் ‘புண்ய’ பூமியை ஒரு நொடியில் மாற்றி அமைத்து விடுவார்கள். இவ்வாறு முன்னர் தலைவர்கள், கூறிய வாயுரையை, மக்கள், நூற்றுக்கு நூறு உண்மையெனக் கொண்டனர். தலைவர்களின் நம்பிக்கையூட்டும் திறமையான பேச்சே இதற்குப் பொறுப்பு.

தொழில் வளம் பெருகாமல் போகவே, இங்கு வேலையற்றோர் தொகை நாளுக்கு நாள் கூடியது. பிறந்த நாட்டில் பட்டினிகிடப்பதைக் காட்டிலும், கடல் கடந்து சென்றாவது; எடுபிடி ஆட்களாக இருந்தாவது, வயிற்றை நிரப்புவோம்—மரணத்தைத் தவிர்ப்போம்—என மக்கள் தேயிலைத் தோட்டத்தையும் இரப்பர் காட்டையும் தேடிச்சென்றனர். வெய்யிலிலிருந்து வந்தவனுக்கு நிழலின் அருமை அதிகமாகத் தெரிவது போல், பஞ்சத்தில் அடிபட்டுக் கிடந்தவனுக்குப் பசியாற உணவு கிடைத்ததும் கொஞ்சம் திருப்தி ஏற்படுவது இயல்பேயாகும். இந்த நிலை நீடித்து நிற்கவில்லை. மீண்டும் மனச்சாந்தி மறைந்தது. பிறந்த நாட்டைப் பிரிந்திருக்கும் மனவேதனை, எதிர் காலத்தைப் பற்றின அச்சம், வாழ்வு சரிவது கண்டு கவலை, மறுபடியும் பிறந்த நாட்டில் பெருவாழ்வு வாழ மாட்டோமா எனும் ஆசை, இத்தன்மையில், இந்நாட்டு மக்கள் வேற்று நாட்டில் மானம் மரியாதை இழந்து, இருந்து வருகின்றனர். ஏகாதிபத்யப் பிடியால் ஏற்பட்ட அனர்த்தம் இது. இப்பிடி தகர்த்தெறியப்பட்டு, தரணியாளும் பொறுப்புத் தியாகிகளின் கைமாறுமானால், வேற்றுநாட்டில் வேதனைப்படும் மக்கள் அனைவரும், பிறந்த நாட்டிற்குத் திரும்பி, நாட்டைப் பொன்னாடாக்கிப் புகழ் வாழ்வு வாழலாம் எனப் பறை சாற்றப்பட்டது. இப்பறை சாற்றலில் மக்கள் நம்பிக்கை (கொள்ளாமல்) எவ்வாறு இருப்பர்?

பிடி தளர்ந்துவிட்டது. புகழ்மிக்க தியாகிகள் பலரும், ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளனர். வெள்ளையன் வெறும் ஏவலாளியாகவும், கட்டளைப்படி காக்கும் காவலாளியாகவும் காலங்கழித்து வருகிறான். இதுவும் அதிகநாள் நீடித்திருக்கப் போவதில்லை.

தலைவர்கள் பேசினது—மக்கள் நம்பிக்கைவைத்து எதிர்பார்த்தது—இன்று நடக்கிறதா? அதற்கான போக்கிலே, எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள், அமைந்திருக்கின்றனவா? முன்னர் தலைவர்கள் சொல்லிய வண்ணம், அந்த இலட்சிய பூமியை இங்கு காண அதற்கேற்ற முறையில் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா? இவ்வளவு வினாக்களுக்கும் ‘இல்லை’ எனும் ஒரே பதில்தான் கூறவேண்டியதாக இருக்கிறது.

பசித்த மக்களுக்கு உணவளிக்கும் முறையிலேயோ, வேலையற்றுக் கிடப்போர்களுக்கு வேலை தரும் வகையிலேயோ, ஆளவந்தார்களின் போக்கு இருக்கவில்லை. முதலாளிகளின் மிடுக்குத் தளராமல் எப்படிப் பார்த்துக் கொள்வது—அவர்களுடைய இலாபப் பெருக்கத்திற்கு எவ்வாறு ஆக்கம் தேடுவது—மத்திய கிழக்கிலும் கீழ்க் கோடியிலும் உள்ள சிறு சிறு நாடுகளின் சந்தையை எவ்வாறு பிடிப்பது—அங்கு இத்துறையில் ஏற்படும் போட்டியை எவ்வாறு சமாளிப்பது—ஆசியா கண்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும்—அதற்கான முறையில் இராணுவம் அமைக்க வேண்டும்—தேச கவுரவம் காக்கப்படவேண்டும்—என்பன போன்ற பிரச்னைகளில்தான் ஆளவந்தவர்களின் செயலும் கருத்தும் செல்கிறது.

முன்னாள் வெள்ளை முதலாளிகளின் வெறியாட்டத்தில், இங்குள்ள ஏழை மக்களின் வாழ்வு இருண்டு கிடந்தது. ஆனால் இன்று, வடநாட்டு முதலாளிகளின் பேயாட்டத்தால், ஏழை மக்களின் வரண்ட வாழ்வு வளமாவதற்குப் பதிலாக, மேலும் கருகிப் போவதற்கே, வழி வகை செய்யப்படுகிறது. ஏகாதிபத்திய அதிகார பீடம் மாறி, அந்த அதிகார பீடத்தில் தியாகிகள் அமர்ந்த பின்னரும், ஏழைக்கு இன்பமளிக்கும் முறையில் மாற்றங்கள் காணப்படவில்லை. மாறாக முதலாளிகளின் விருப்பத்தை—இலாப ஆசையைத்—தங்கள் தியாகமெனும் திரையிட்டு மறைத்து, நல்லதோர் நோக்காகப்—போக்காகக் காட்டப்படுகிறது. நாம் மட்டும் அல்ல, இன்னும் நல்லறிஞர் பலரும், இந்நிலை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டினர். மக்களுக்கு இருந்த மயக்கத்தில், நமது வாயுரை, அவர்கள் செவியில் புகவில்லை. இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை. ஆளவந்தார்களின் இந்த ஆபத்தான போக்கைத் தடுத்து, தக்கவழியில் அனைவருக்கும் பயனளிக்கும் முறையில், திட்டம் தீட்ட நிர்ப்பந்திக்கலாம். விழிப்படைந்தவர்கள், அந்த நாள் விருப்பு வெறுப்புகளை மறந்து ஒன்றுபடுவதின் மூலந்தான், இந்த நற்காரியம்

வெற்றி பெறவும், நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் பணி பல புரியவும் முடியும். கடினமானது, ஆனாலும் சாத்தியமாகக் கூடியது.

ஆளவந்தார்கள்மீது ஏதாவது குறைகூற வேண்டும் என்பதற்காக, எதனையும் நாம் கூறவில்லை. போதிய ஆதாரத்துடன், அவர்கள் போக்கு, நாட்டு மக்களுக்கு மேலும் நலிவைத் தரக்கூடியது என்று கூறுகிறோம். சில நாளைக்கு முன் இந்திய பார்லிமெண்டில் நிதி அமைச்சர் ஒரு மசோதா கொண்டுவந்தார். மூலத் தொழிற்சாலைகளுக்குப் பண உதவி செய்வதற்காக, இண்டஸ்டிரியல் பைனான்ஸ் கார்ப்போரேஷன் எனும் ஒரு நிதி அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அதன் நோக்கம்.

இந்த நிதி அமைப்பின், தன்மை என்ன? இதன் போக்கு எவ்வாறு இருக்கும்? இதனால் இலாபம் பெறுகிறவர்கள் முதலாளிகளா அல்லது மக்களா? இதற்கு அவசியமென்ன? என்பனபோன்ற விஷயங்களை நாம் அலசிப் பார்க்க வேண்டும்.

இதன் மொத்த மூலதனம் ஐந்து கோடி ரூபாய். ரூ. 25,000 வீதம், 2,000 பங்குகளாகப் பிரிக்கப்படும். இதில், இந்திய அரசாங்கத்திற்கு 400 பங்குகள்—இந்திய ரிசர்வ் பாங்கிற்கு 400 பங்குகள்--மீதமுள்ள 1200 பங்குகள் முதலாளிகளுக்கும் அவர்கள் ஆதிக்கத்திலுள்ள பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனி போன்ற நிதி ஸ்தாபனங்களுக்கும் ஆகும். மற்றவர்களுடைய மூலதனத்தைத் திருப்பிக் கொடுக்கவும், 2½ சதவிகிதம் இலாபத்தில் பங்களிக்கவும் இந்திய அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது.

20 கோடி ரூபாய்க்குக் குறையாமல் கடன் பத்திரங்கள் வெளியிடவும், இந்தத் தொகையைத் திரும்பக் கொடுக்கவும், அதற்கான வட்டி தரவும் இந்திய அரசாங்கத்தின் உத்தரவாதம் இருக்கிறது, மேலும் 10 கோடி ரூபாய் வரையில். நீண்ட காலச் சேமிப்பாகப் பெறவும் அனுமதிக்கப்படுகிறது. எந்த நாட்டவராயினும், இதில் பணத்தைச் சேமிக்கலாம்.

இது மட்டுமல்ல. மத்திய அரசாங்கத்தின் அனுமதியின் பேரில், வெளிநாடுகளில் கடன் வாங்க உரிமை இருக்கிறது.

இந்தக் கார்ப்பரேஷனின் நிர்வகிக்கிறவர்கள் 11 பேர்கள். இந்திய அரசாங்கத்தின் சார்பில் இருவரும், தொழில் அரசர்களையே நிர்வாகிகளாகக் கொண்ட ரிசர்வ் பாங்கின் சார்பில் மூவரும், முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள பாங்குகள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் சார்பில் ஐவரும், நிர்வாக அங்கத்தவர்கள் ஆவர். இதன் மானேஜிங் டைரக்டர், இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட போதிலும், ரிஸர்வ் பாங்கு நிர்வாகிகளைக் கலந்துகொண்ட பின்னர்தான் நியமிக்கப் பெறுவார்.

மூலதனம் வரும் வகையையும், நிர்வாகிகள் நியமிக்கப்படும் முறையையும் பார்க்கும்பொழுது, இந்த இண்டஸ்டிரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒரு முதல்தரமான முதலாளிகள் ஆதிக்கம் மிகுந்த நிறுவனமாகத்தான் இருக்கமுடியும் என்பது விளங்கவில்லையா? இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வை, கட்டுப்பாடு என்பனவெல்லாம் வெறும் அலங்காரச் சொற்களையன்றி வேறன்று.

இதுகுறித்த மசோதாவை முன்னிலைப்படுத்திய நிதி அமைச்சர் ஷண்முகம்,

"தனி நபர்களால் தொடங்கப் பெறும் பெரு தொழில்களுக்கு உதவிசெய்வதையே குறியாகக் கொண்டு இக்கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படுகிறது"

எனக்குறிப்பிட்டுள்ளார்.

உலகத்தின் முதலாளித்துவ முறைக்கே, இன்று பெரியதோர் நெருக்கடி காத்துக்கொண்டிருக்கிறது. இதனை முதலாளித்துவ நாடுகள் நன்கு தெரிந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த நாட்டு முதலாளிகளும் இதனை உணராமல் இல்லை. முதலாளிகளில் ஒருவரான நிதிஅமைச்சர் ஷண்முகமும், வரவிருக்கும் ஆபத்தை அறிந்துள்ளதின் விளைவாகத்தான், தன்வர்க்கத்தைக் காக்கும் பெரும் பணியில் முனைந்துள்ளார். இதனை நாம் இட்டுக்கட்டிக் கூறவில்லை. நிதி மந்திரியார் வாயுரையே இதனை மெய்ப்பிக்கிறது.

இதோ,

"தனிநபர் தொழில்ஸ்தாபனத்தின் பண நிலை எவ்வாறு இருந்த போதிலும், குறிப்பிடத் தகுந்த அளவு உதவத்தேவைப்படும் நிலை ஏற்பட்டே தீரும். அந்நிலையில் வேண்டும்தொகையைப் பொதுமக்களிடமிருந்து சாதாரணமாகப் பெறமுடியாது. குறித்த தொழிலின் அழிவும் வளர்ச்சியும், அவ்வாறு பெறப்படும் உதவியைப் பொறுத்த விஷயமாகும். இது போன்ற நெருக்கடியான நிலைமையிலிருந்து சம்பந்தப்பட்ட தொழில்களைக் காப்பாற்றவே, இக்கார்ப்பரேஷன் துவக்கப்படுகிறது."

முதலாளித்துவ முறைக்கு எதிர்காலம் இல்லை என்பதையும், நெருக்கடி விரைவில் வரவிருக்கிறது என்பதையும், தனி முதலாளிகளால் சுயேச்சையாகத் தீர்த்துக்கொள்ள முடியாதென்பதையும், அரசாங்கமே அச்சமயத்தில் துணைசெய்யவேண்டும் என்பதையும், தீர்க்கமாகத் தெரிந்துள்ள ஷண்முகம், தனது பங்காளிகளைக் காப்பாற்ற, இந்தப் புனிதப்பணியில் இறங்கியுள்ளார். நாம் இதுகண்டு ஆச்சரியப்படவில்லை, எட்டி இனிக்காது என்று தெரிந்துள்ள காரணத்தால்.

முதலாளித்துவமுறை பயனற்றது என்று கண்டபின்னரும், அதனை தொலைத்துத் தலைமுழுக முதலாளிகள், தாமாக முன்வரமாட்டார்கள். அதன் அழிவைத் துரிதப்படுத்த, அது அழிந்த இடத்தில வேறோர் நல்லமுறையை நிர்மாணிக்க, சமதர்மமே பிணிதீர்க்கும் மருந்து—அதுவே தமது வாழ்வின் இலட்சியம்—எனப் பேசி வந்தவர்கள், இலட்சியபாதையைக் காணவும், அதன்வழி மக்களை இட்டுச் செல்லவும் கடமைப்பட்டவர்கள், கண்மூடி மௌனியாகி, நகத்தால் கிள்ளியெறிய வேண்டியதை வளரவிட்டுத், ததாஸ்து கூறிக்கொண்டு இருப்பது, இன்று இந்தப் 'புண்ணியபூமி'ஒன்றில்தான் நடக்கக் கூடிய காரியமாகும்.

நம்து காது செவிடுபடும்படி சமதர்மம் பேசிப்பேசி, தமது இலட்சியம் இதுதான் எனச் சுட்டிக்காட்டிய, பதவியிலுள்ள பண்டிதநேருவின் முன்னிலையில் தான், முதலாளித்துவத்தை உயிர்ப்பிக்க ஆர்வம் காட்டப்படுகிறது. சமதர்மப்பண்டிதரோ சல்லடம் கட்டுவதற்குபதில், ஷண்முகத்தின் போக்கிறகு 'ததாஸ்து' கூறுகிறார்.

—❀—

# அதையும் பார்—இதையும் பார்

பாழடைந்த அஸ்தினபுரத்திற்கு ந்துமைல் தொலைவில், கங்காகாதர் னும் சமவெளி இருக்கிறது. பல ற்றாண்டுகளாக அந்தமண், மக் ள் பரிசத்தையே கண்டதில்லை. ன்று அதற்குப் புதுவாழ்வுகிடைத் ருக்கிறது. பெரியபெரிய இயந் ரக் கலப்பைகள் அந்தப்பகுதியைப் ண்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. இந்திய அரசாங்கத் தின் பொருளைத் துணைகொண்டு ஐக் ய மாகாணம், வெட்டவெளியை பயிர் விளையும் வயல்களாக மாற் றும் வேலையை மேற்கொண்டுள்ளது.

மொத்தம் 20,000 ஏக்கர் நிலங் கள் சாகுபடிக்குத் தகுதியானதாக ஆக்கப்பெறும். அடுத்த ஆண்டு மேமாதத்திற்குள், அங்கு, குடியிருக் கத்தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்படும். 500 ஏக்கர் கொண்ட கிராமங்களாக, அப்பகுதி பிரிக்கப்படும். பத்து ஏக்கர்களுக் குக் குறையாமலும் இருபது ஏக்கர் களுக்கு அதிகம் போகாமலும் தனி நபர்களுக்குக் கொடுக்கப்படும். சிறு சிறு துண்டாக்குவது கண்டிப்பாகத் தடுக்கப்படும்.

முதல்முதலாக அங்கு உரமாக உபயோகமாகப்படும் உயர்ந்த தழைப்பயிர் செய்யப்படும். பின்னர் கோதுமை பயிரிடப்படும். மேலும் ஓராண்டிற்குள், இப்பொழுது ஐக் கிய மாகாணத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருளைக் காட்டிலும் 18000–டன் கோதுமை கூடுதலா கும் என நம்பப்படுகிறது. இது போன்ற இன்னும் சில திட்டங்களை ஐக்கிய மாகாணசர்க்கார் பின்னர் மேற்கொள்ள இருக்கிறது. மக்கள் பசியாற உட்கொள்வதற்கு உணவுப பொருள் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், பண் படுத்தினால நன்செய் புன்செய் பயிர்கள் தேவையான அளவிற்கு அதிகமாகக் கிடைக்கும் மண்ணை மறந்து வாழ்வது, மதிகெட்ட செயல்— மன்னிக்கமுடியாத குற்றம். இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடி, உருவான காரியத்தைச் செய்ய முனைந்த ஐக்கிய மாகாணத் தின் முயற்சி போற்றுதலுக் குரியது மட்டுமல்ல, மற்ற மாகாணத்தவரும் பின்பற்றக் கூடியநல்லமுறையுமாகும்.

தென்னாட்டில் இத்தகையமுயற்சி மேற்கொள்ளப் படுமா? இங்கு எவ் வளவோ நிலப்பரப்பு கவனிப்பா ரற்று, வெறும் கள்ளியும் முள்ளியும் படர்ந்த காடாகக் கிடக்கிறது. பயிர் செய்யப்படும் நிலங்களுக்கும், நாட்டில் பலபகுதிகளில் நல்ல நீர் தேக்கங்கள் இல்லாத குறையால் ஒருபோகம் பயிராவதும் குதிரைக் கொம்பாக இருக்கிறது. இக்குறை பாட்டால் காலாகாலத்தில் பெய்யும் மழையும் கடலோடு கலக்கவும், பருவமழையை நம்பிப் பயிர்வைத்து விடும் உழவன், பருவம் தவறிவிடின் மாடுபோல் உழைத்தும் குறைந்த பலனையே பெறவேண்டியவனாகவும் இருக்கிறான்.

இத்துறையில் ஏதாவது மந்திரி கள் செய்ய முற்படினும், இந்திய அரசாங்கம் எந்த அளவிற்கு உதவி செய்யும் என்பது முதல்முதலாகத் தீர்மானிக்கவேண்டிய விஷயம். வட நாட்டிலுள்ள பகுதிகளுக்குக் காட் டப்படும் அக்கரை, தென்னாட்டிற் குக் காட்டப்படுமா? இன்றுள்ள இந் திய அரசாங்கத்தின் போக்கு இம் முறையில் நம்பிக்கையூட்டுவதாக இல்லை.

சிலநாளைக்கு முன் சென்னைக்கு, இந்திய அரசாங்கத்தில் மின்சாரம் சுரங்கம் முதலிய இலாக்காக்களின் மந்திரியாக இருக்கும் N. V. காட் கில் வந்தார். அவருக்கு, சென்னை அரசாங்க மாளிகையில் விருந்துபசாரம் நடந்தது. பிரதமர், மராமத்து இலாக்கா மந்திரி பக்த வத்ஸலம் உள்பட சில அமைச்சர் களும் கலந்துகொண்டனர். விருந் துக்குப் பின்னர், டில்லியிலிருந்து வந்துள்ள பெரிய அமைச்சரைத் தென்னாட்டின் பல பகுதிகளிலிருந் தும் பல முக்கியஸ்தர்கள் பேட்டி கண்டனர். இராயலசீமாபகுதியினர், தங்கள் பகுதியில் பூமிக்கடியில் பற் பல உலோகங்கள் மறைந்து கிடப்ப தாக முன்னரே இந்திய அரசாங்கம் ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளி யிட்டிருப்பதாகவும், அதனைப் பயன் படுத்தும் முறையில் சில சாதனங் களை அமைத்துத் தரவேண்டுமென மனு ஒன்றை அமைச்சர் கையில் அளித்தனர்.

வடக்கு விசாகப்பட்டினம் ஜில்லா வின்சார்பில், "உத்திர ஆந்திரா" பத் திரிகையின் ஆசிரியரான இராம மூர்த்தி என்பவர், வாம்ஷதாரா— லாங்குலியா திட்டங்களை நிறை வேற்ற, சென்னை அரசாங்கத்திற்குக் கடனாகவாவது அல்லது இனமாக வாவது பணம் கொடுத்து உதவ வேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்.

கிருஷ்ணா—பெண்ணாறு திட் டத்தை நிறைவேற்ற, சென்னை அர சாங்கத்திற்குப் பொருள் உதவி செய்யவேண்டுமெனத் திருமுகம் சமர்ப்பிக்கப்பட்டது.

சிடெட் ஜில்லாக்களின் செல்வ வளர்ச்சிக்கானவகையில்உதவவேண் டுமென வேண்டுகோள் சமர்ப்பிக் கப்பட்டது.

செங்கல்பட்டு ஜில்லாவின்சார்பில் சி. என். முத்துரங்க முதலியார், அடையாறு—ஆரணி திட்டங்களை நிறைவேற்றவும், மின்சாரக் கருவி களைச் செய்யும் தொழிற்சாலை வச திக்கும் ஆவனசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்தமனுக்களும்,வேண்டுகோள்க ளும் என்னவாயின, தெரியுமா? ஒன்றுக்கு இல்லையாயினும்,மற்றொன் றிற்காவது அமைச்சரிடமிருந்து நல்லவாக்குக்கிடைத்ததாகக்கருதுகி றீர்களா? பொறுப்புள்ள அமைச்ச ராயிற்றே, அந்தத் தவறை எல்லாம் செய்து விடுவாரா? வெட்டு ஒன்று துண்டு இரண்டாகவே பேசினார்!

'இவ்வளவு மாகாணப்பற்று உத வாது. நாம் அனைவரும் ஒரு தாயின் சேய்கள். சென்னையின் திறமை டில் லியில் பிரகாசிக்கிறது. இந்தியாவின் மொத்த நலத்தையே நீங்கள் கருத் தில் கொள்ளவேண்டும். நமது உள் ளங்களில் மாகாணப்பற்றுக்கு இனி அறவே இடமளித்தல் கூடாது. இந்தியா எனும் பெரு நோக்கு நம க்கு வேண்டும்,' என்றெல்லாம் கூறி விட்டு, இத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேற மேலும் பத்து ஆண்டு கள் பிடித்தாலும் பிடிக்கலாம் என முடித்துவிட்டார்.

வானம் பெய்யும் மழை, கடல் நீரோடு கலந்து வீணாகிறதென்றும், நல்ல தேக்கங்கள் காண்பதின் மூலம் மின்சார உற்பத்தியை அதிகரித்து, வீட்டிற்கு வீடு ரேடியோவும், கிரா மத்திற்கு கிராமம் மின்சார விளக்கு களும் ஏற்படுத்தலாம் என்றும், தொழில் வளத்தைப் பெருக்கி

(2-ம் பக்கம் பார்க்க)

## சைவத்திற்கு ஆள் சேர்க்கும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

அதாவது, திருநீறணிந்தவர் தூர்த்தராயினும் ஆக, அவரை இகழலாகாது என்று கூறி, அவரை வணங்கி, அவருக்கு, மற்றவர்களுக்குக் கொடுத்ததைக் காட்டிலும் இரட்டிப்பாக—அதாவது இருநூறு பொன் கொடுத்தனுப்பினார் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட ஒரு தூர்த்தனுக்கு அந்த மன்னன், மற்றவர்களுக்குக் கொடுத்ததைப் பார்க்கிலும் இருமடங்கு பொன் கொடுத்தான் என்பது எதைக்காட்டுகின்றது? அந்த அடியவர் பெருந்தகை, சிற்றின்ப நுகர்ச்சியில் பெரிதும் விருப்பமுள்ளவர்போல் தெரிகிறது; ஆகவே, அவருக்கு, மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல் நூறு பொன் கொடுத்தால், அது, அவருடைய சிற்றின்ப விளையாட்டுக்குப் போதாது போகுமாயின் அந்த நேரத்தில், அந்த அடியவர் திலகம், பொன் கொடுத்தவன், 'என்னுடைய தேவைக்குப் போதியதாகக் கொடுக்கப்படாதோ! இப்போது இந்தப் பூவை நல்லாள் இன்னும் நூறு பொன் தா, இல்லையேல் உன் தாபத்தைத் தீர்க்கமாட்டேன் என்று பிடிவாதஞ் செய்கின்றனளே' என்று தன்னைச் சபித்துவிட்டால் என்ன செய்வது? நரகமன்றோ கிடைக்கும்! எனவே, இவருக்கு நூறு பொன் அதிகமாகக் கொடுப்பதே அரன் பணி செய்து கிடக்கும் என்கடமையாகும் என்று கருதி, அம்மன்னன் அவருக்கு நூறுபொன் அதிகமாகக் கொடுத்தான் என்பதைத் தானே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இல்லையேல், அவன் ஒரு தூர்த்தன் என்பதைக் கண்கூடாகக் கண்ட பின்னரும், அவனை மற்றை அடியவர்களினும் மேலாகக் கருதி, அவனுக்கு மட்டும் நூறு பொன் அதிகமாகக் கொடுத்திருப்பானா? இதுதான் சைவத்தை வளர்க்கும் முறையா? ஒழுக்கமும், நேர்மையும், நெறியும் சைவத்திற்குப் புறம்பானவை என்பதைத்தானே இந்நிகழ்ச்சி அங்கை நெல்லிக்கனியேன அறிவுறுத்துகின்றது.

எனவே, இந்நிகழ்ச்சி, அந்த மன்னன் காலத்தில் சைவத்திற்கு ஆள் சேர்ப்பதில் எத்துணைப் பஞ்சம் இருந்தது என்பதையே எடுத்துக் காட்டுவதாயுள்ளது என்னும் கூறுவதை எவரேனும் குற்றமென்று கொள்ளமுடியுமா? இல்லையேல், ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பும் தமிழர் முன்னிலையில், ஒழுக்கம் தவறி, காமப் படுகுழியில் வீழ்ந்த அவதியுற்ற ஒருவனுக்கு, அவன் நீறணிந்திருந்தான் என்ற காரணத்திற்காக இருநூறு பொன் கொடுக்கப்பட்டது என்று ஒரு தமிழன் புராணம் பாடி இருப்பானா? இத்தகைய ஒரு புராணத்தைத்தான் நம்மவரில் சிலர் ஒழுக்கத்தைக் கற்பிக்கும் உயரிய நூலென்று நாக்கூசாது நவில்கின்றனர். என்னே, இவர்தம் அறியாமை!

ஒழுக்கம் இல்லாதவர்களாய் இருந்தாலும், அவர்கள் நீறணிந்து காணப்பட்டால், அவர்களை இகழ்ந்து பேசக்கூடாதென்றும், மீறி இகழ்ந்தால் நரகம் கிடைக்கும் என்றும் ஒரு புராணம் பாடப்பட்டிருக்குமாயின், அத்தகைய ஒரு நூலை, உயிரைக் கொடுத்தாயினும் மானத்தைக்காக்கும் தமிழ்மக்களுக்கு உரிமையாக்கிப் பேசுவது போன்ற பேதைமை வேறொன்றிருக்க முடியுமா என்பதனைப் புராண அன்பர்கள் எண்ணிப் பாராமல், வறிதே எம்மீது சீறிவிழுவதால் பெறப்படும் பயன்யாதோ, நாமறியோம்.

இனி, மானத்தையும் இழந்து, உடல்மையும் அழுகி ஒழுகும் தொழுநோய்க்குள்ளாக்கி, வாழ்க்கையையும் பாழாக்கும் முறைதவறிய சிற்றின்பநுகர்ச்சியில் ஈடுபடும் ஒருவனை, அவன் நீறணிந்துள்ளான், எனவே அவன்பால் மாசில்லை, அவன் மன்பதையின் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவன் என்ற முறையில், அவனுக்கு இரட்டித்த மதிப்புக் கொடுப்பதுதான் சைவசமயத்தின் சிறந்த பண்பென்றால், அதனை அறிவுடைய எவரும் தங்கள் சமயமாகக் கொள்ளவேமாட்டார் என்பது ஒருதலை.

✲

### பம்பாயும்—சென்னையும்


பம்பாயில், 8 வயதுக்கு மேற்பட்டச் சிறுவர்களை மூத்தவர்களெனக் கணக்கிட்டு உணவுப் பங்கீடு அளிக்கிறார்கள். ஆனால் சென்னையில் 12 வயதுக்கு மேற்படாதவர்களெல்லாம் சிறுவர் அளவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

### புதிய அரசியல்

அடுத்த ஆண்டு பிப்ரவரி 15-ந் தேதிக்குள், இந்திய அரசியல் புதிய அமைப்பு நகல் பொதுமக்களுக்குக் கிடைத்துவிடும்.

### பிரிட்டன் பரிசு

சிலோன் விடுதலை பெறும் நன்னாளை முன்னிட்டு, பிரதமர் உபயோகத்திற்கென ஒருமோட்டார்காரும், பார்லிமெண்டு தலைவருக்கு ஒரு அரியணையும், செங்கோல் ஒன்றும், பிரிட்டன் பரிசாக வழங்கப் போகிறது.


(மாத வெளியீடு)

ஆசிரியர்:—

இரா. நெடுஞ்செழியன் M.A.,

80 பக்கங்களுடன் 1-1-48ல் வெளிவருகிறது. கதை கவிதை கட்டுரை சீரிய முறையில் மிளிரும்.

| கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஓர் ஆண்டு | 5-0-0 | 7-0-0 |
| ஆறு மாதம் | 3-0-0 | 4-0-0 |
| தனி இதழ் | 0-8-0 | 0-10-0 |

விபரங்கட்கு:—

நிர்வாகி "மன்றம்"

30/79 செம்புதாஸ் தெரு,

சென்னை.


Edited Prined Publised by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.